

BURN'S STONE WARE PIPES

பர்ன் பீங்கான் குழாய்கள்

பர்ன் கம்பெனியாரின் பீங்கான் குழாய்கள் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷனுக்கு சரியாக பி. எஸ். எஸ்-க்கு தயாரிக்கப்படுகின்றது. இக் குழாய்கள் பூமியிலுள்ள திராவகம் கலந்த காற்றுக்களால் தாக்கப்படாதது. அழிவுற்றது.

சென்ற 80 வருஷங்களுக்கு மேலாக, இந்தியா, பர்மாவிலுள்ள முனிஸிபல் கார்ப்பொரேஷன்கள், சுகாதார இலாகாக்கள் மற்றுமுள்ள பொதுஸ்தாபனங்கள் பர்னின் பீங்கான் குழாய்களை உபயோகித்துத் திருப்தியடைந்துள்ளனர்.

SAVE FOR VICTORY
BRITISH WAR SAVINGS MOVEMENT
ASK YOUR BANK

பர்ன் & கம்பெனி லிமிடெட், ஸ்தாபிதம்: 1781.

12, மிஷன்ரோ, கல்கத்தா. தொழிற்சாலை:- ராணிகஞ்சு & ஜபல்பூர்.

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:—பம்பாய் கம்பெனி லிமிடெட், த. பெ. நெ. 109, மதராஸ்.

BURN & CO., LTD.
ESTABLISHED 1781
12, MISSION ROW, CALCUTTA.
WORKS AT RANIGANJ AND JUBBULPORE

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

காபுல் பால் காயம்

இது சாதாரணமாக கடைகளில் விற்கப்படும் காயம் போன்றதல்ல. கலப்பற்ற அசல் பால்காயம். ஒவ்வொரு குடும்பத்துக்கும் மசாலா சாமான்களுடன் உபயோகிப்பதற்கு அத்யாவசியமானது.

10 தோலா டப்பி 1-க்கு ரூ. 1.

முத்தையா ஸ்டோர்ஸ்,
மவுண்ட் ரோட், மதராஸ்.

பகவத் கீதை

விலை ரூ. 3.

மானேஜர்,
சுதேசமித்திரன் புத்தகசாலை,
சென்னை.

FREE

EARN Rs. TEN PER-DAY. You can easily earn Rs. 10 - per day without any investment in your spare time. No labour. No secrecy. Thousands have been benefitted. Ask for samples. Full particulars sent FREE.

LONDON C COMPANY
P. B. 165 S M M LAHORE.

EAB)

டோங்ரே பாலாமிருதம்

பலஹீனமான குழந்தைகளுக்கு
விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய
சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

ஜகஜ்ஜாலன்

ஓர் அரிய பெரிய நூதன்மான துப்பறியும் நாவல். ஜகஜ்ஜாலன் என்னும் திருடனுடைய வீரதீர பராக்கிரமங்கள். படிக்கப் படிக்க ஆச்சர்யமாயிருக்கும். 518 - பக்கங்கள் கொண்ட சுத்தப்பதிப்பு.

விலை ரூ. 1—12—0 தபால்செலவு அணா 8.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T. S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. *Editor*, C. R. Srinivasan, B.A.

சுதேசமித்திரன்

Vol. 13 No. 52 24-1-'43 **வாரப்பதிப்பு** Price 2 Annas.

பெரிய புராணத்துக்கு மன்னிப்பு!

யுத்தம் காரணமாக எங்கும் ஒரே கவலை! அரிசியில்லையே! சாப்பாட்டுக்கு என்ன செய்வோம்? சர்க்கரைக்கு என்ன செய்வது? மண் எண்ணெய் கிடைப்பது குதிரைக்கொம்பாயிருக்கிறதே! ஒன்றிருந்தால் இன்னொன்றில்லை. பகைவன் வாயிலண்டை வந்துவிட்டான்! இவற்றை நினைந்து நினைந்து இந்தியாவெங்கும் எல்லோருக்கும் மூளை குழம்பியிருக்கிறது! இந்தக் கஷ்டங்களெல்லாம் தீர்ந்து நாடு சுபிட்சமாக வேண்டுமேயென்று எல்லோரும் அனவரதமும் ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த சமயத்தில் சுய மரியாதைக் காரர்களுக்கு மட்டும் என்னவோ எல்லாவற்றையும் விட்டு ஒரு விநோத யோசனை உதித்திருக்கிறது. அவர்கள் "பெரிய புராணமா? அதைக் கொண்டுவா? கொளுத்திவிட்டு மறு காரியம்! கம்பராமாயணமா? அப்படிப் போடு சக்கை! இதோ தகனம்!" என்றெல்லாம் சொல்லிக்கொண்டு முன் வந்திருக்கின்றனர்.

தமிழன்னைக்கு எந்தவிதத்திலும் ஹானி ஏற்படாமல் பார்த்துக்கொண்டு அபயமளிக்கப் போவதாக இவர்கள் முன்பு பறை சாற்றிக் கொண்டிருந்தார்களே, இப்போது சொல்வது ஏதோ மாதிரி இருக்கிறதே என்றால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தங்கள் கோஷ்டியைப் பற்றி கவனத்தைக் கவர வேண்டுமென்பதே அவர்களது செய்கையின் நோக்கமென்று தோன்றுகிறது.

சேக்கிழார் தவறு!

பெரிய புராணத்தைக் கொளுத்தும்படியாகச் சேக்கிழார் செய்த மகா பெரிய தவறுதான் என்ன? ஆத்மா, ஆண்டவன், அந்தணர், மோட்சம், நரகம் இவற்றில் நம்பிக்கை வைத்ததுதான் அவர் செய்த கொடும் பாபம்! இந்தக் குற்றத்துக்காக அவருக்கு என்ன தண்டனை விதித்தால்தான் தகாது!

ஆனால் சேக்கிழாருக்குச் சுயமரியாதைக்காரர்கள் விதிக்கவிருந்த தண்டனை தமிழர்களுக்கு விதிக்கும் தண்டனையாகுமென்றும் இது தாம் முன் தன் கண்களையே குருடாக்கிக் கொள்வதாகுமென்றும் தமிழ் நாட்டில் எல்லோரும் ஒரு முகமாகக் கண்டிக்கவே 'எல்லோரும் இதைக்கண்டிக்கிறீர்கள். போனால் போகிறது! இன்னும் 2 மாதத்துக்கு இதை நிறுத்தி வைக்கிறோம்" என்று அவர்கள் பெரிய புராணம், கம்பராமாயணம், மனு நீதி முதலிய நூல்களுக்குத் தற்காலிகமாக மன்னிப்புக் கொடுத்திருக்கிறார்கள்! ஒரு விஷயத்தை அவர்கள் கவனிக்கவேண்டும். மேற்படி நூல்களை வேண்டுமானால் தங்களுக்கு இல்லாமல் செய்து கொள்ளலாமேயொழிய தமிழர்களுக்கில்லாமல் மட்டும் செய்ய முடியாது.

சென்ற வார நிகழ்ச்சிகள்

கல்கத்தாவில் மீண்டும் ஜப்பானியக் குண்டுவீச்சு

சென்ற 15-ந் தேதியன்றிரவு ஜப்பானிய விமானங்கள் மீண்டும் கல்கத்தாப் பிரதேசத்தைத் தாக்கின. ஆனால் அவ்விமானங்கள் போட வேண்டுமென்று நினைத்த பகுதிகளில் குண்டுகளை வீச இயலவில்லையாம். எதிரி விமானங்களில் சில வேறு சில இடங்களில் குண்டுகளை எறிந்துவிட்டு ஓடிவிட்டன. 3 ஜப்பானிய விமானங்கள் பிரிட்டிஷ் விமானங்களால் சுட்டுவீழ்த்தப்பட்டன. எதிரியின் இத்தாக்குதலால் பொதுஜன அமைதி எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லையென்றும் அவரவர்கள் தங்கள் அலுவல்களைக் கவனிக்கச் சென்றனர் என்றும் வங்காள ஸிவில் பாதுகாப்புக் கமிஷனர் விடுத்த அறிக்கையொன்றில் கூறப்பட்டிருக்கிறது.

கல்கத்தா நகரின் வடபாகத்திலே தான் எதிரிகள் குண்டுகளை வீசினர். இருகுண்டுகளைத் தவிர பாக்கி எல்லா குண்டுகளும் வயல்களிலேயே விழுந்தன, துரதிருஷ்டவசமாக இரு குண்டுகள் கூலிகள் வசித்த பிரதேசத்தில் விழுந்தன வென்றாலும் சேதம் சொற்பந்தான். 22-வயதுள்ளவராயினும் ஸார்ஜண்டு பிரிங்ஸ் என்ற விமானி அதிதீரத்துடன் எதிரி விமானங்களில் மூன்றை வீழ்த்தினார்.

17-ந் தேதியன்று காலையில் ஜப்பானிய விமானங்களில் சில சிட்டகாங் பிரதேசத்திலுள்ள பெனி விமானகூடத்தைத் தாக்கின. சேதம் வெகு சொற்பம். எதிரி விமானங்களில் ஒன்று நாசம், மற்றும் சிலசேதமடைந்தன. பிரிட்டிஷ் விமானம் ஒன்றைக் காணோம். 17-ந்தேதி இரவிலும் எதிரி விமானங்கள் சிட்டகாங் பகுதியைத் தாக்கின. சேதம் அதிகமாகவில்லையெனப்படுகிறது. ராணுவத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சேதம் விளைந்ததென்றும் தெரிவிக்கப்பட்டுளது

19-ந் தேதியன்றிரவு ஜப்பானிய விமானங்களில் சில கல்கத்தாப் பிரதேசத்தை மீண்டும் தாக்கின. அநேகம் குண்டுகள் போடப்பட்டன. இரண்டிடங்களில் தீப்பற்றிக் கொண்டது. ஆனால் அது அணைக்கப்பட்டது. சேதம் சொற்பம்.

* * * *

இந்தியாவில் காப்பிப் பயிர்

இந்தியக் காப்பித் தொழிலின் நிலைமையைப்பற்றி ஸர் பிரடரிக் ஜேம்ஸ் சமீபத்தில் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்குப் பேட்டி அளிக்கையில் சமீபத்தில் பெய்த மழை காரணமாகக் காப்பி உற்பத்தி குறைந்திருக்கிறதென்றும் 15 ஆயிரம் டன் கிடைக்குமென முன்பு போடப்பட்ட மதிப்பில் குறைந்த பட்சம் 2000 டன் குறையுமென்றும், இதன் காரணமாகவும் உள்நாட்டுத் தேவை அதிகரித்திருப்பதன் காரணமாகவும் ஏற்றுமதிகள் குறைக்கப்படுகின்றனவென்றும், எனினும் இவ் வருஷம் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் நிலைமை பரிசீலிக்கப்படுமென்றும் கூறினார்.

ராணுவத்தினருக்கும் பொது மக்களுக்கும் அதிகக் காப்பி ஹோட்டல் ஏற்பட்டு வருவதாலேயே உள்நாட்டில் காப்பிக் கொட்டை உபயோகிக்கும் அளவு அதிகரித்திருக்கிறதென்றும் ஸர் ஜேம்ஸ் குறிப்பிட்டார்.

* * * *

பத்திரிகைக் காகித ஸப்ளை 25% குறைவு

வட அமெரிக்காவிலிருந்து வரும் கப்பல்களில் போதுமானபடி இட வசதி கிடைக்கவில்லையாதலாலும் இன்னும் உபயோகிக்கப்படாத லைஸென்ஸுகள் சம்பந்தமாகத் தாராளமாகப் பத்திரிகைக் காகிதத்துக்குக் கப்பல்களில் இடவசதி செய்ய வேண்டியிருப்பதாலும் 1943 ஜனவரி ஜூனுக்கான புதிய பத்திரிகைக் காகிதசப்ளை விகிதம் 1942 ஜூலை டிஸம்பர் அளவில் 100க்கு 25-வீதம் குறைக்கப்படும். இந்த முறையில் கணக்கிடப்பட்டு மூன்று மாத தேவைக்கு ஸப்ளை வழங்கப்படும்.

பத்திரிகைக் காகிதத்தை உபயோகிப்பதில் சாதயமான எல்லா வகைகளிலும் சிக்கனத்தை அனுஷ்டிக்கும்படி பத்திரிகை சொந்தக்காரர்களுக்கு யோசனை கூறப்படுகிறது.



* * * *

மத்திய சட்டசபை உபதேர்தல்

இந்தியா சட்டசபை அங்கத்தினராகவிருந்த ஸர் அப்துல்லா ஹரூன் காலகதியடைந்ததால் ஏற்பட்ட காலி ஸ்தானத்துக்கு நடந்த உபதேர்தலில் அவரது புதல்வர் சேத் யூசப் அப்துல்லா ஹரூன் அங்கத்தினராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்கு வயது 26. இவர் தான் இந்தியா சட்டசபையில் உள்ளவர்களில் வயதில் இளையவர்.

* * * *

பத்திரிகைகளுக்கு வசதிகள்

1942-ம் வருஷம் டிசம்பர் மாதம் 21-ந் தேதி நடைபெற்ற அகில இந்திய பத்திரிகாசிரியர் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி குறிப்பிட்ட சில செய்திகளை பத்திரிகைகளில் பிரசுரிக்கக்கூடாதென ஏற்படுத்தப்பட்டிருந்த தடையை மகாநாட்டுத் தலைவர் ரத்துசெய்து சமீபத்தில் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதை முன்னிட்டு சென்னை சர்க்கார் மீண்டும் வழக்கம்போல் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு சர்க்கார் காரியாலயங்களில் செய்திகள் திரட்ட வசதிகள் அளித்திருப்பதாகவும் இனி ரிபோர்ட்டர்கள் சர்க்கார் காரியாலயத்திற்கு வந்து சர்க்கார் உத்தரவு முதலிய அறிக்கைகளை பெற்றுச் செல்லலாமென்றும் விமானப்படைத் தாக்குதல் ஸ்தலங்களை அவர்கள் பார்வையிடலாமென்றும் சர்க்கார் பிரதம காரியதரிசி எழுதியிருக்கிறார்.

* * * *

இரண்டு ரூபாய் நோட்டுகள்

மத்திய சர்க்கார் கட்டளைக்கிணங்கி ரிசர்வ் பாங்கி சீக்கிரத்தில் இரண்டு ரூபாய் நோட்டுகளை வெளியிடுமென அறிவிக்கப்படுகிறது. இந்த நோட்டின் நீளம் $4\frac{1}{2}$ அங்குலமும் அகலம் $2\frac{1}{2}$ அங்குலமும் இருக்கும்,

போர் போகும் போக்கு

★

ரஷ்யப் போர்முனை

ரஷ்யருக்குக்கிடைத்து வரும் அபாரமான வெற்றிகளைக் கண்டு உலகமுழுதும் பிரமித்து நிற்கிறது. பிரமிப்பு நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமாயிருக்கிறது. ஸ்டாலின் கிராடைக் கைப்பற்றுவது நிச்சயம் என்று உறுமிய ஹிட்லருக்கு இன்று அங்கு சிக்கிய தம் துருப்புகளைப் பத்திரமாக வாபஸ் செய்வதே ஒரு பெரிய பிரச்னையாகிவிட்டது. முன்பு அப்பகுதியில் முதல்தரமான இரண்டு லக்ஷம் நாஸித் துருப்புகள் இருந்தன. இப்போது அவ்வெண்ணிக்கை மூன்றில் ஒரு பாகமாக குறைந்துவிட்டது. பலர் மடிந்தனர்; இன்னும் பலர் ரஷ்யரிடம் சிறைப்பட்டனர். சிக்குண்ட ஜெர்மனியரைச் சிதைக்குமுன், ரஷ்யர் அவர்களுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்தார்கள்; எதிரிகள் சரணடைவதைத் தவிர அவர்களுக்கு வேறுவழியில்லையென்று எடுத்துக்காட்டினார்கள். ஆனால் நாஸிப்பண்டை அவ்வெச்சரிக்கையை மதிக்கவில்லை. முக்கிய காரணம் அவர்களுக்கு உதவி அனுப்புவதாக வெளியேயுள்ள ஜெர்மன் மேலதிகாரிகள் கம்பியில்லாத் தந்தி மூலம் உறுதி கூறியதுதான். ஆனால் அவர்கள் தங்கள் வாக்குறுதியை நிறைவேற்றிவைக்கும்வரை, ரஷ்யர் காத்துக் கொண்டிருக்கவில்லை. முழுமூச்சுடன் எதிரிப் படையை நிர்மூலமாக்குவதில் ஈடுபட்டனர். ஸ்டாலின்கிராட் வெற்றியில் சிக்கிய நாஸிப்படையில் சிறிதாவது தேறுமா என்பது விரைவில் தெரிந்துவிடும்.

இதே சமயத்தில் ராஸ்டாவுக்குப் பல திக்குகளிலிருந்து ஆபத்து அதிகரித்துக்கொண்டிருக்கிறது. வாரனேஷுக்குத் தெற்கே ரஷ்யர் இன்னொரு தீவிரத் தாக்குதல் தொடுத்திருக்கிருர்கள். வாரனேஷ்-ராஸ்டாவ் ரயில்பாதையிலுள்ள ரஸாஷ், மில்லரோவோபோன்ற முக்கிய நிலையங்களை ஜெர்மனியா பறி கொடுத்துவிட்டனர். உக்ரேனின் தலை நகரான கார்காவையும் ரஷ்யர் கிழக்கேயிருந்து நெருங்கிக் கொண்டிருக்கிருர்கள். ரஷ்யா இனி மேற்கு திசையிலிருந்தும் ராஸ்டாவை நெருங்கக் கூடும். அதற்கு கிழக்கு, தென் கிழக்கு இரு திக்குகளிலும ரஷ்யர் முன்னேற்றத்தை எதிரிகள் தேக்கக்கூடவில்லை. காகஸஸ் நிலைமையும் நாஸிகளுக்கு வேதனையே உண்டாகும். அங்கு வோராஷிலாஸ்க், ஆர்மவிர் இவ்விரு ரயில் நிலையங்களுக்கும் ஆபத்து அதிகரித்து வருகிறது. மத்தியப் போர் முனையில் எதிரிகள் வெலிகிலுகியை இழந்த பின் பலமுறை எதிர்தாக்குதல் தொடுத்தனர். ஆனல் சிறிதும் பலித்ததாகத் தெரியவில்லை.

வடக்கு அரங்கத்தில் லெனின் கிராடைச் சுற்றி ஜெர்மனியர் இட்டிருந்த முற்றுகை தகர்க்கப் பட்டுவிட்டது. இப்போது அந்நகருக்குள்ளிருக்கும் ரஷ்யருக்கு உணவு, தளவாடங்கள் முதலியவை தாராளமாகப் போய்ச் சேருகின்றன.

வட ஆப்பிரிக்க அரங்கம்

எகிப்திலிருந்து பின் வாங்கி ஓடிய ரோமலின் படை டிரிபோலிடானுவில் ஸெம் ஸெம் பகுதியில் நேசத்துருப்புகளை எதிர்த்து நிற்குமெனப் பலர் எதிர்பார்த்தனர். இப்போது அங்கிருந்தும் எதிரிகள் ஓட ஆரம்பித்துவிட்டனர். நேசப்படையினர் முன்னேற்ற வேகத்தைத்தணிப்பதற்காக எதிரியின் பின்னணிப்படை ஓரளவு எதிர்த்து போராடுகிறது எனினும் பிரிட்டிஷ் படையினர் கடற்கரையோரமாயுள்ள மிஸுராடாவைக் கைப்பற்றி அதற்கும் மேற்கே விரைந்து கொண்டிருக்கின்றனர். இப்போது அவர்களுக்கும் டிரிபோலிக்கும் 30 மைல் தான்.



வட ஆப்ரிக்காவின் மறு கோடியில் போர் நடவடிக்கைகள் இன்னும் அயர்ந்திருக்கின்றன: ஆனல் இருதரப்பின்ரும் தங்கள் படை நிலயங்களை மும்மரமாக வலுப்படுத்திக்கொண்டிருக்கிருர்கள் பருவ நிலைக் கோளாறு நீடித்திருக்கிறது. அந்நிலையில் சிறிது மாறுதல் ஏற்பட்டதும், முதலில் தாக்கும் சந்தர்ப்பத்தை நேசப்படை கை நழுவவிடாதென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் சாட் பிரதேசத்திலிருந்து கிளம்பிய ஒரு சுதந்திர பிரஞ்சுப்படை இதுவரை 1500 மைல் தூரம் முன்னேறியிருக்கிறது. இப்போது அப்படைக்கும் தென் டியுனிஸியாவிலுள்ள பிரஞ்சுப் படை, லிபியாவிலுள்ள பிரிட்டிஷ் படை இவைகளுக்கும் தொடர்பேற்பட்டுவிட்டது. ஆனல் சாட் பகுதியிலிருந்து வந்த பிரஞ்சுப் படையின் அளவைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை.

தென்மேற்குப் பஸிபிக்

நியுகினியிலும், குடால்கனலிலும், கடும் போர் நீடிக்கிறது. நியுகினியில் ஒரு பகுதியான பாபுவாவில் ஸனனந்தா என்ற ஸ்தலத்தில் ஜப்பானியர் உறுதியுடன் எதிர்த்து நின்றனர். ஸனனந்தா கிராமத்தை நேசப் படை பிடித்துவிட்டது. அப்பகுதியிலிருந்து எதிரிகளை அடியோடு வெளியேற்றும நாள் அதிக தூரத்திலில்லையென நேச அதிகாரிகள் நம்புகிருர்கள்.

ராபாலில் குழுமியுள்ள ஜப்பானியக் கடற்படையை நேச விமானங்கள் அடிக்கடி தாக்கி வருகின்றன. பல எதிரிக் கப்பல்கள் மூழ்கியதுடன் இன்னும் பல நாசமாயின.

தென் மேற்கு பஸிபிக்கிலுள்ள நேச ராணுவ தளகர்த்தரான ஸர் பிளேமி ஆஸ்திரேலியருக்கு ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிருர். நேசக் கட்சியினர் ஆஸ்திரேலியர்வை ஒரு தளமாக்கி தங்களை அழிக்க முற்படுமுன் ஆஸ்திரேலியாவை ஒழித்துவிடப்போவதாக ஜப்பானியர் முன்பு பயமுறுத்தினர். அப்பயமுறுத்தலை நிறைவேற்றி வைக்க எதிரிகள் தங்களாலான அனைத்தையும் செய்வரென்பதே அவ்வெச்சரிக்கையின் சாரம்.

* * * *

பெர்லின்-லண்டன் மீது குண்டு வீச்சு

பிரிட்டிஷ் விமானங்கள் சென்ற சனிக்கிழமை ஏராளமாகச் சென்று பெர்லின் மீது குண்டுகளைப் பொழிந்தன. மறு நாளும் ஜெர்மன் தலைநகர் மீது ஓரளவு தாக்குதல் நடந்தது. எதிரி விமானங்களும் கூட்டம் கூட்டமாக வந்து லண்டன் நகரைத் தாக்கினர். சேதம் பெர்லினில்தான் மிகவும் அதிகமென அறிவிக்கப்படுகிறது.

* * * *

இராக் யுத்தப் பிரகடனம்

அச்சு நாடுகளுடன் யுத்தம் தொடுத்திருப்பதாக இராக் சர்க்கார் ஒரு பிரகடனம் விடுத்திருக்கின்றனர். அதில் எதிரிகளின் விஷமப் பிரசாரத்தை எடுத்துக் காட்டி இருக்கிருர்கள்.

* * * *

ஏன் அளவு மீறிப் புகழ்ச்சி?

அமெரிக்காவில் உள்ள டியூக் சர்வ கலாசாலையில் மிஸ்டர். வெண்டல் வில்கி ஒரு பிரசங்கம் புரிந்தார். அதில் அவர் நேச தேசத்தாரும் அச்சு நாட்டினரும் ஒரு சில நபர்களை மட்டும் தெய்வம்போல் தொழுவதைப் பலமாகக் கண்டித்துப் பேசினர்.

"இப்போது எங்கு பார்த்தாலும் ஒரு சிலரைப் பொதுமக்கள் அளவு கடந்து புகழ்ந்தும், பாராட்டியும், வருகின்றனர். இது கண்கூடு. அவர்களுக்குள்ள உண்மையான திறமைக்கும் அதிகமாகவே அவர்கள் கொண்டாடப்படுகின்றனர்". என்ரூர் அவர்.

"ஸ்டாலின், சியாங்கேஷேக், சர்ச்சில், ரூஸ்வெல்ட், இவர்கள் சாதாரண புருஷர்கள் அல்ல. அவர்களுக்குக் கிடைத்திருக்கும் உன்னத ஸ்தானம் அவர்களது தகுதியையே தெரிவிக்கிறது; ஆயினும் ஒரு விஷயம்: ஒருவர் இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது என்று நாம் கூறமுடியுமா? எல்லாரும் சமம என்பதை சந்தேகமில்லாதவாறு நாம் ஸ்தாபிக்க வேண்டும். நமது பலதரப்பட்ட புத்தி சாதுர்யத்திலும், பலதரப்பட்ட வருமானத்திலுமமட்டும் இந்தச் சமத்துவத்திறகு இடம் கொடுக்காமல், அறிவு உபயோகத்தில் காட்ட வேண்டும். இந்த அறிவு வளர்ச்சி ஜாதியையும் நிறத்தையும் பிரதானமாகப் பொருட்படுத்துவதிலலை" என்று மிஸடர் வில்கி தெரிவித்தார்.

* * * *

அமெரிக்காவில் ஸர் முதலியார் பேச்சு

பஸிபிக் யுத்த சபையில் இந்தியாவின் பிரதிநிதியாயுள்ள ஸர் ஏ. ராமசாமி முதலியார் அமெரிக்காவிலுள்ள இல்லினுயில் பேசுகையில், "ராஜீயப் பிரச்னைகளில் இந்தியாவுக்கும், பிரிட்டனுக்கும் அபிப்பிராய பேதம் இருந்து வருவது உண்மை தான் ஆனல் முதலில் யுத்தத்தை ஜெயிக்க வேண்டுமென இந்திய மக்கள் விரும்புகிருர்கள். இந்தியாவில் தங்களுக்குள்ள பொறுப்பையும் அதிகாரத்தையும் பிரிட்டிஷார் இப்போதே கைவிட்டுவிடக்கூடுமென்று நான் நம்பவில்லை.

நாங்கள் எங்களுக்குள் ஒரு ஒப்பந்தத்திற்கு வரவில்லை. யுத்தம் நடக்கையில் ஒரு புதிய அரசியலை அமைப்பது அசாத்தியம். அதில் கவனம் செலுத்தினல் யுத்த முயற்சி பாதிக்கப்படும், இந்தியாவில் வாக்கு வாதங்கள் ஓங்கிவிடும். ஜப்பானியரை ஆதரிக்கும் இந்தியர் எவரும் கிடையாது" என்று தெரிவித்தார்.

தெய்வ சங்கற்பம்

★

"பியர்ள்"

★

அம்மா பேட்டை ஸ்டேஷனை வந்தடைவதற்குள் இரவு மணி 11-½ மெயில் நீண்டதொரு சப்தம் செய்து, கரிய புகையைக் காரிருளில் கலக்கவிட்டுக் கொண்டு போய்விட்டது. அடுத்த வண்டி இனிமேல் 4 மணிக்குத்தான். அதுவரை அங்கே தங்கியிருந்து பொழுதைக் கழிப்பதைவிட வேறு ஒரு மார்க்கமும் தெரியவில்லை. வீட்டுக்கும் திரும்பிப் போகமுடியாது. ஆகையால் அங்கு போட்டிருந்த ஒரு பெஞ்சியில் என் பெட்டி சகிதமாக அமர்ந்தேன்.

அன்றிரவு வானத்தில் மப்பும் மந்தாரமுமாயிருந்தது. ஆகாயம் ஒரே காடாந்தகாரமாயிருந்தது. பெருமழை பிடித்துக்கொள்ளாமலிருக்க வேண்டுமே யென்று கவலைப்பட்டேன். மினுக்கு மினுக்கு என்று ஒரு லாந்தர்மட்டும் எனக்குத் துணையாக எரிந்துகொண்டு இருந்தது. அந்த மாதிரி இடியையும், மின்னலையும் என் ஜன்மத்தில் பார்த்ததே கிடையாது. ஒவ்வொரு தரமும் பளிச்சென்று மின்னும் மின்னலில் ஸ்டேஷன் கட்டடம், பிளாட்பாரம், உழைப்பாளிகள் வீடு, அப்பால் அடர்ந்து வளர்ந்திருந்த மரங்கள் எல்லாம் ஒரு கணம் தெரிந்து பிறகு மறைந்துவிடுகின்றன.

எங்கோ மல்லிகை பூத்திருக்கிறது. அதன் வாசனை வேறு கம்மென்று வீசுகிறது. மரங்களின் இலைகள் ஒன்ரோடொன்று உராய்வதால் உண்டாகும். "சல சல" வென்று சப்தம் வேறு. இவையெல்லாம் கலந்து மோகினிப் பிசாசின் ஞாபகத்தைக் கிளப்பிவிட்டது. அன்றுதான் மோகினிகளைப்பற்றிய கதைப் புஸ்தகம் ஒன்றைப் படித்து முடித்திருந்தேன். அது மனதில் திகிலாகவே இருந்தது. "யாராவது ஒருவர் இப்பொழுது பேச்சுத் துணைக்கு வரமாட்டார்களா?" என்று என் மனது ஏங்கிக்கொண்டிருந்தது. கடவுளையும் வேண்டிக் கொண்டேன்.

அந்த மங்கலான லாந்தர் வெளிச்சத்தில் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி இரண்டு. இன்னும் வண்டி வர இரண்டு மணி நேரம் இருக்கிறது. என்ன செய்வது, ஏதோ காலடி சப்தம் கேட்டுத் திரும்பினேன். ஒரு வாலிபர் கையில் பெட்டியுடன் வந்துகொண்டிருந்தார். "அப்பா" என்று பெரு மூச்சு விட்டேன். பிறகு எங்கள் இரண்டு பேருக்கும் சம்பாஷணை ஆரம்பித்தது.

"ஏன் ஸார் உங்களுக்கு மோகினிப் பிசாசு இவைகளில் நம்பிக்கையுண்டா?" என்று கேட்டேன். உடனே அவர் இடி இடியென்று சிரிக்க வாரம்பித்தார். அது என்னைப் பரிகசிப்பது போலிருந்தது. "அவை எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை ஸார். உங்களுக்கு இந்த மாதிரி கட்டுக் கதைகளில் எல்லாம் பிரியம்போலிருக்கிறது. ஆகையால் நான் உங்களுக்கு ஒரு நிஜ மோகினி கதை சொல்லுகிறேன்" என்ரூர்.

அவர் சொன்ன கதை தான் இது!

2

"நான் இப்பொழுது சொல்லப் போகும் கதை, படித்த கதை அல்ல. ஜோடித்ததும் அன்று. உண்மையாகவே என் நண்பனின் கதை" என்று சொல்லி ஆரம்பித்தார்.

சௌந்தர ராஜனும், நானும் நெருங்கிய நண்பர்கள். அவன் ஹாக்கி விளையாடுவதில் ஒரு நிபுணன். ஹாக்கி விளையாட்டுப் பார்க்க வேண்டுமானல் அவன் ஆடிப் பார்க்க வேண்டும். இந்தியாவுக்குச் சொந்தமான ஹாக்கியில் அவ்வளவு தேர்ச்சி பெற்றிருந்தான் அவன். எந்த ஊரில் 'மாட்ச்' ஆடினுலும் எனக்குக் கடிதம் போடுவான். நானும் அங்குபோய் விடுவேன்.

"சௌந்தரராஜன் ஆட்டம் ஆடுவதை விட்டு இன்றுடன் 2½ வருடம் ஆகிறது.

1938-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் மைசூரில் நடந்த ஒருஹாக்கி மாட்சுக்கு என்னை வரும்படி எழுதியிருந்தான். நானும் அன்று அங்குபோயிருந்தேன். அப்பா! அந்த ஆட்டத்தைப்பார்க்க எவ்வளவு கும்பல்!

மணி 4-30. மாட்ச் ஆரம்பமாகிவிட்டது. ஆரம்பித்த 9வது நிமிஷம் சௌந்தரராஜன் எதிர்த்த கட்சியின் மேல் ஒரு 'கோல்' அடித்து விட்டான். அன்று சௌந்தரம் ஆடிய ஆட்டத்தை என்னல் விவரிக்க முடியாது.

அடுத்தபடியாக சௌந்தரத்துக்கு பந்து கிடைத்தது. பந்தை எடுத்துக்கொண்டு பாம்புபோல் வளைந்து வளைந்து கோல் அருகே போய்விட்டான். குச்சியையும் ஓங்கி விட்டான். அடுத்த நிமிஷம் சௌந்தரம் அடிக்கும் பந்தைத் தேக்குவதற்காக வந்த சிவசைலத்தின் காலில் சௌந்தரம் அடித்த அடிபட்டது. அவ்வளவுதான். சிவசைலம் கீழே விழுந்தான். பின் எழுந்துநிற்க முடியாமல் கால் முறிந்து விட்டது.

பிறகு அவனுக்கு வேண்டிய முதலுதவியைச் செய்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டார்கள். பிறகு ஆட்டம் இனிது நடந்தது. சௌந்தரத்தின் கட்சியே முடிவில் வெற்றி பெற்றது.

ஆட்டம் முடிந்து பரிசுகள் வழங்கப்பட்டதும் சௌந்தரம் நேரே ஆஸ்பத்திரிக்குச் சென்ருன். சிவ சைலத்தின் நிலைமை மிகவும் பரிதாபமாகவிருந்தது. சௌந்தரத்துக்கு அவனை விட்டுப் பிரிய மனம் வரவில்லை தான் செய்த தவறுதலுக்காகத் தன்னையே நொந்துகொண்டான்.

3

சிவசைலத்திற்கு பெற்ரோர்கள் கிடையாது. அவன் பி. ஏ. படித்துக்கொண்டிருக்கும் போது அவன் தந்தை காலமானுர். அவர் இறந்த மூன்ரும் மாதம் தாயும் மறைந்தாள். மிஞ்சியது இவனும் இவன் சகோதரியும் மட்டும்தான். குடும்பத்தையும் சகோதரி கமலாவையும் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு சிவ சைலத்தின் தலையில் விழவே அவன் படிப்பை நிறுத்திவிட்டு உத்தியோக வேட்டைக்குத் தொடங்கினுன்.

வேட்டை ஆரம்பித்த நான்காம் மாதம் சிவசைலத்திற்கு இருந்த ஹாக்கி கேம் அவனுக்கு 'எஸ். ஐ. ஆர்'ல் ஒரு 'எஸ். எம்' வேலையை ஏற்படுத்திக் கொடுத்தது. இந்தக் காலத்தில் நல்ல விளையாட்டுக்காரர்களுக்குத் தானே மதிப்பு!

கமலாவிடம் அவன் கொண்டிருந்த அன்பை எவ்வளவென்று சொல்லமுடியாது. "இவளை எப்படியாவது ஒரு நல்ல வரனைப் பார்த்துக் கொடுத்துவிட வேண்டும் என்பதே அவன் கவலை. ஒவ்வொரு மாதமும் சம்பளம் வாங்கியவுடன் "தன் தங்கையின் கலியாணத்திற்கு" என்று ஒரு சிறு தொகையை எடுத்துவைத்துவிடுவான்.

கமலா ஒரு துரதிர்ஷ்டம் பிடித்தவள். அடுத்தமாதம் கல்யாணம் என்று நிச்சயமானபோது தான் அவன் தந்தை இறந்தது. அத்துடன் அவள் கல்யாணம் நின்றுவிட்டது. பிறகு தாயும் இறந்தாள்.

கமலா பார்ப்பதற்கு, ரம்பை, ஊர்வசி மாதிரி. இருக்க மாட்டாள். ஆனல் நிரம்ப அவலட்சணமும் இல்லை. முகத்தில் நல்ல களை. புத்திசாலித்தனத்தில் அவளுக்கு ஈடு ஒருவரும் இல்லை. ஆனல் சற்று துடுக்கு.

வருகிற தைமாதம் எப்படியாவது கமலாவின் கலியாணத்தை முடித்து விட வேண்டும் என்று தீர்மானம் செய்து வைத்திருந்தான் சிவசைலம். அந்தச் சமயத்தில்தான் மாட்சுக்கு சிவசைலம் மைசூர் வந்திருந்தது.

ஆஸ்பத்திரியிலிருந்த சிவசைலத்திற்கு அடுத்த நாள் காலை நல்ல பிரக்ஞை வந்தது. அப்பொழுதுதான் அவன் தன் நிலைமையை உணர்ந்தான் "செத்தாலும் நம் வீட்டிலதான் போய்ச் சாகவேண்டும், இங்கு கூடாது" என்று நினைத்தான். ஆகையால் டாக்டர் வந்தபோது "தான் இனி அங்கு இருக்க முடியாது" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான். அடுத்த நாளே அவனுடைய ஊராகிய கரூருக்குக் கொண்டுவந்து விட்டார்கள்.

வாசலில் வண்டி வந்து நின்றது. கமலா அண்ணனை வரவேற்க ஓடி வந்தாள். அவள் வண்டியண்டை வருவதற்குள் சிவ சைலத்தை இரண்டு பேர் தூக்கிக் கொண்டு வருவதைப் பார்த்ததும் வயிற்றில்'சொரேர்' என்றது கமலத்திற்கு. "ஐயோ! அண்ணுவிற்கு என்ன?" என்று வாய் விட்டு கத்தி விட்டாள். கண்கள் நீரை தாரை தாரையாகக் கக்கின.

வந்தவர்கள் நடந்த யாவற்றையும் விவரமாகக் கமலாவிற்குச் சொன்னர்கள். பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று அவள் மனம் துடித்தது. தன் வாயால் வந்தவாறெல்லாம் சகோதரன் காலை ஒடித்த சௌந்தரத்தை வைதாள்.

கப்பென்று சிவசைலம் அவள் வாயை மூடினுன். "அசடே! அவன் வேணுமென்று இவ்விதம் செய்தான்? ஏதோ தெய்வ சங்கற்பம், என் விதி" என்ருன்.

இந்தப் பதில் அவளுக்கு ஒரு ஆறுதலையும் அளிக்கவில்லை. ஆனல் தன் அண்ணனுக்குப் பணி செய்வதில் ஈடுபட்டாள்.



"......அன்று நான் 'அவுன்ஸ்' கிளாஸை உடைத்ததற்குப் பரிகாசம் செய்தீர்களே......உங்கள் விரலையே கவனித்துக்கொள்ளத் தெரியவில்லையே........"

4

தன் வீட்டுக்கு வந்த சௌந்தரம் அன்று இரவை சிவராத்திரியாகவே கழித்தான். சதா சிவ சைலத்தின் உருவமே அவன் மனக் கண் முன் தோன்றித் தோன்றி மறைந்தது.

மன வேதனை தாங்காது அன்றிரவே மைசூருக்குப் பிரயாணமானான். மைசூர் ஆஸ்பத்திரியில் அவன் நண்பனைக் காணவில்லை. கடைசியர்க் அங்குள்ளவர்களைக் கேட்டு சிவசைலம் இருக்கும் ஊரையும், விலாசத்தையும் அறிந்துகொண்டு சிவ சைலத்தின் ஊராகிய கரூருக்குப்பிரயாணமானான்.

கரூரில் சிவசைலத்தின் நிலைமையைப் பார்த்ததும் அவனால் ஒன்றும் பேச முடியவில்லை. கடைசியாக "சிவசைலம்" என்றான்.

"யார்? சௌந்தரராஜனா? வா உட்கார் எங்கே இவ்வளவு தூரம்? என்றான் சிவசைலம்.

இவ்விதம் நல்ல வரவேற்புக் கிடைக்குமென்று சௌந்தரம் கனவிலும் கருதவில்லை.

"உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். உடம்பு எப்படி இருக்கிறது? நான் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும் என்றான் சௌந்தரம். அவன் குரல் நடுங்கிற்று.

"நண்பா! வீணே நடந்ததை நினைத்து மனதைப் புண்படுத்திக்கொள்ளாதே. நீ என்ன செய்வாய்? எல்லாம் என் விதி" என்றான் சிவசைலம்.

அண்ணா சொல்படி சௌந்திரத்துக்குக் கமலா காப்பி கொண்டு கொடுத்து உபசரித்தாள்.

"கமலாவை அழைத்து இவர் இனி உனக்குத் துணையாக இருப்பார்" என்றான் சிவசைலம்.

கமலாவின் விஷமம், துடுக்கு, சிரிப்பு, விளையாட்டு "சௌந்தரம் என் கண்ணில் பட்டால் அவன் காலை முறிக்க வேண்டு"மென்ற எண்ணம் யாவும் அவனைக் கண்டதும் எங்கோ பறந்து விட்டது!

கமலா வீட்டுவேலைகளைச் செய்யும்போது சிவசைலத்தைக் சௌந்தரம் கவனித்துக் கொள்வான். டாக்டரிடம் போவது, ஆஸ்பத்திரிக்குப் போவது, வேளா வேளைக்கு மருந்து கொடுப்பது முதலியவற்றை அவன் பார்த்துக் கொண்டான். மற்ற வேலைகளை கமலா பார்த்துக் கொண்டாள்.

5

ஒரு நாள் சௌந்தரம் சிவசைலத்தின் கட்டிலின் பக்கத்தில் உட்கார்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்தான். கமலா தரையில் உட்கார்ந்து காய்கறிகளை நறுக்கிக்கொண்டிருந்தாள். முருங்கக்காயை கமலா நறுக்கும் போது அது அரிவாள் மணையில் உராய்வதால் "கிரிங் கிரிங்" என்று சப்தம் செய்தது. இதைக் கண்ட சௌந்தரத்திற்கு காயை நறுக்கி மேலே சொன்ன சப்தம் செய்ய வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று.

உடனே "கமலா! இங்கு கொடு! நான் நறுக்கித் தருகிறேன்" என்றான். "உங்களுக்குத் தெரியாது; வேண்டாம்" என்று எவ்வளவோ கமலா சொல்லியும் கேட்கவில்லை. கடைசியாகக் கொடுத்து விட்டு அந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

சரேலென்று கையிலிருந்த காயைக் கீழே போட்டான் சௌந்தரம். கை வாயை அடைந்தது. விரலிலிருந்து ரத்தம் மளமளவென்று கொட்டியது.

இதைக் கண்ட கமலாவிற்கு சிரிப்பு அடக்க முடியவில்லை, கலீரென்று சிரித்துவிட்டாள். "அன்று நான் அவுன்ஸ் கிளாஸை உடைத்ததற்குப் பரிகாசம் செய்தீர்களே! இன்று உங்கள் விரலையே கவனித்துக்கொள்ளத் தெரியவில்லையே!" என்று சொல்லி மீண்டும் விழுந்து விழுந்து சிரித்தாள்,

கமலாவின் இறுதிச் சிரிப்பு இதுவே போலும்!

பிறகு கமலா அவன் காயத்தை ஈரத்துணியால் கட்டினாள்.

கமலா சிரித்ததையும், சௌந்தரம் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு மௌனமாயிருந்ததையும், பிறகு கமலாவே அவனுக்கு சிகிச்சை செய்வதையும் பார்த்த சிவசைலத்திற்கு அந்த வேதனையான வேளையிலும் மனம் சாந்தமடைந்தது. அவன் உதட்டில் புன் முறுவல் தவழ்ந்தது. "இவர்கள் இரண்டு பேரும் தம்பதிகளாக இருந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்! என்றெண்ணினான்.

அன்று பௌர்ணமி. மாலை 6 மணிக்கு கமலா வீட்டு வேலைகளை முடித்துவிட்டு குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு தண்ணீர் எடுக்க அமராவதிக்குச் சென்றாள்.

அமராவதியை அடைந்ததும் ரொம்ப அவசரமாகக் குடத்தைக் கழுவினாள். ஓடுகின்ற தண்ணீரின் மேல் பரப்பை அப்படியும் இப்படியுமாக அந்தக் குடத்தாலே ஒரு கலக்குக் கலக்கினாள். தண்ணீர்க் குடத்தை ஒரு வீசு வீசி இடுப்பில் வைத்தாள்.

வேகமாகக் கரையேறினாள். ஏறினவள் சற்றுத் தயங்கினாள். பௌர்ணமை என்று ஞாபகம் வந்ததினால் தான் தயங்கினாள். இப்பொழுது தான் அண்ணன் கொஞ்சம் குணமடைந்து விட்டானே. மேலும் அவர் இருக்கிறார், நான் போகும் வரை பார்த்துக்கொள்வார். கொஞ்ச நேரம் இருந்து சந்திரனைப்பார்த்து விட்டுத் தான் போவோமே. என்று நினைத்தாள். உடனே குடத்தை இறக்கி மடியில் வைத்துவிட்டு தண்ணீரில் காலைத் தொங்கவிட்டு உட்கார்ந்தாள்.

மங்கலான வெளிச்சத்தில் தண்ணீர் கறுப்பாகத் தெரிந்தது. ஒவ்வொரு அலையும் கமலாவின் பாதத்தை நனைத்துச் சென்றன. சந்திரனொளியில் தண்ணீரெல்லாம் உருக்கி ஊற்றிய வெள்ளிபோல மாறிவிட்டது. சிறிது நேரத்திற்கு ஒரு தரம் மேகத்திரைகள் வந்து மூடின. அப்பொழுது தண்ணீர் கறுத்தது. உலகம் இருண்டது.

அதே போலத்தான் இருந்தது கமலாவின் அப்போதைய மன நிலைமை.

6

இந்தச் சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் ஆகி விட்டன. ஒரு நாள் பிற்பகல் ஒரு மணி இருக்கும். வெயில் கடுமையாக விருந்தது.

அந்தச் சமயத்தில் ஒரு தபால் காரன் அங்கு வந்து சௌந்தரத்தின் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டுச் சென்றான்.

கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான் சௌந்தரம். அதில், ஸிம்லாவில் ஒரு 'ஹாக்கி' மாட்ச் நடக்கப் போவதாயும், அது எக்ஸிபிஷன் 'மாட்ச்' என்றும், அதை வைசிராய் வந்து பார்வையிடப் போவதாயும் அதற்கு சௌந்தரம் அவசியம் விளையாட வரவேண்டுமென்றும், எக்காரணத்தை முன்னிட்டும் மறுக்கக்கூடா தென்றும் எழுதியிருந்தது.

பேசாமல் கடிதத்தைக் கமலாவின் கையில் கொடுத்தான். கமலா கடிதத்தை விவரமாக அண்ணனுக்குப் படித்துக் காண்பித்தாள். சிவசைலத்தின் மனம் பூரித்தது. "இந்தச் சமயத்தை கை விடாமல் அவசியம் போக வேண்டும், இல்லா விட்டால் நீ என்னுடன் பேசக் கூடாது." என்று சொல்லி விட்டான் சௌந்தரத்திற்கு.

கமலாவைப்பார்த்தான் சௌந்தரம். பேச நாவெழவில்லை. அதன் அர்த்தத்தை அறிந்து கொண்டாள் கமலா—"நீயாவது இரு என்று சொல்லமாட்டாயா?" என்பது தான் அதன் அர்த்தம் "அண்ணாவே அவ்விதம் சொல்லிவிட்டார். நான் என்ன சொல்ல விருக்கிறது? போய் வெற்றியுடன் வாருங்கள்" என்றாள் கமலா அரை குறை மனதுடன். அண்ணாவைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படியும், ஏதாவது உடம்பு அதிகமாய் இருந்தால் உடனே தந்தியடிக்கும் படிக்கும் சொல்லிவிட்டுப் போய்விட்டான் சௌந்திரம். ரூ 15 கைச் செலவிற்காக கமலாவிடம் கொடுத்தான்.

எதையோ பறி கொடுத்தது போல இருந்தது கமலாவிற்கு சௌந்தரம் போன பிறகு.

7

கொஞ்சம் கொஞ்சமாக குணமடைந்த சிவசைலத்துக்குத் திடீரென்று ஒருநாள் ஜன்னி கண்டுவிட்டது. சரேலென்று எழுந்து உட்காருகிறான். சம்பந்தமில்லாமல் உளறுகிறான். ஆகையால் அவனைக் கட்டிலுடன் கட்டியிருக்கிறது. டாக்டர் கமலாவைக் கூப்பிட்டு "அம்மா! நீ தெரியப்படுத்த வேண்டியவர்களுக்கெல்லாம் தெரியப்படுத்திவிடு ஏதோ உன் அண்ணா பிழைத்தால் அதிர்ஷ்டந்தான்" என்று சொல்லி விட்டார்.

இதைக்கேட்ட கமலா குழந்தை மாதிரி தேம்பித் தேம்பி அழுதாள். சௌந்தரத்திற்குத் தந்தி கொடுத்தாகிவிட்டது.

காலை 7 மணியிருக்கும். சிவத்திற்கு ஜன்னி கொஞ்சம் குறைந்தது. நன்றாகப் பேசிக்கொண்டிருந்தான். அப்பொழுது கமலாவைத் தன் பக்கத்தில் கூப்பிட்டு "கமலா! என்னமோ நான் இனி பிழைக்கப்போவதுகிடையாது" என்றான். "அண்ணா! அப்படிச் சொல்லாதே. நீ நிச்சயம் பிழைத்துவிடுவாய்" என்று சொல்லி கமலா அழுதவண்ணம் அவன்மனதைதேற்றினாள்.

"நான் நினைக்கவில்லை. அதோ அதுமாதிரியிருந்தால்தான் நான் பிழைப்பேன்" என்று சொல்லி சுவற்றில் மாட்டியிருந்த ஒரு படத்தைக் காட்டினான்.

யமன் எருமைக் கடாவின் மேல் தன் ஆயுதங்களாகிய சூலம், பாசக்கயிறு முதலியவைகளுடன் அட்டகாசமாக உட்கார்ந்திருக்கிறான். கடைவாய்ப் பற்கள் இரண்டும் உதட்டுக்கு வெளியில் நீண்டுகொண்டிருக்கிறது. சாவித்திரி தலைவிரிகோலமாக யமனைப் பின்தொடரும் படம் அது!

"ஆகையால் கமலா நீ சமத்தாயிரு. சௌந்தரம் இருக்கிறான். உன்னைப் பார்த்துக்கொள்வான். உனக்காகச் சேர்த்த பணத்தை நீயே எடுத்துக் கொள், சுகமாய் இரு" என்றான்

"சுகம் வேறா அண்ணா" என்றாள் கமலா. மேலே பேச அவளால் முடியவில்லை.

சற்று நேரம் பேசாமலேயே அவன் படுத்திருந்தான். பிறகு "கமலா! சௌந்தரம் வந்துவிட்டானா?" என்று கேட்டான்.

"இதோ வந்துவிடுவார்" என்றாள் கமலா.

ஐந்து நிமிஷங்கள் சென்றன. குபீரென்று எழுந்தான் சிவசைலம். பக்கத்தில் அவன் ஆவி பிரிந்தவுடன் பூஜை செய்வதற்காக புஷ்பம், பழம், தேங்காய் முதலியவை வைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்த புஷ்பச் சரத்தைக் கையில் எடுத்தான்.

"கையைக் கொடுங்கள், கொடுங்கள்" என்று கத்திக்கொண்டு தன் இரு கரத்தையும் நீட்டினான். கமலா தன் கரத்தை நீட்டினாள். சிவ சைலத்தைப் பார்க்க வந்திருந்த குண்டுத் தாத்தாவும் கையை நீட்டினார். இருவருடைய கையையும் சேர்த்து தன் வலது கையில் பிடித்து கொண்டான். புஷ்பச் சரத்தால் இருவருடைய கையையும்-கமலா-தாத்தா இருவருடைய கைகளையும் சேர்த்துக் கட்டினான். "கமலா! நீ ஏன் உலகத்தில் அநாதையாக இருக்க வேண்டும்? இதோ நானே உன் கல்யாணத்தை முடித்து வைக்கிறேன். சௌந்தரம் இனிமேல் உனக்குத் துணைவன்" என்றான்.

உச்சி காலப் பூசைக்காக கோவில் மணி "டிங் டிங்" கென்று ஒலித்தது. சங்கம் "பூம் பூம்" என்று ஒலித்தது.

மீண்டும் கமலாவைப் பார்த்து "கமலா நீ அந்த மாதிரியே இருந்து காலத்தைக் கழி" என்று சுவற்றில் மாட்டி யிருந்த ஒரு படத்தைக் காட்டினான்.

அது தாசி வயற்றில் பிறந்து தவக் கோலம் பூண்டு அன்னம் அளிக்கும் அமுத சுரபியை கையில் தாங்கி நிற்கும் மணிமேகலா தேவியின் படம்.

பிறகு "சௌந்தரம்" என்று சொல்லிக் கொண்டு குண்டுத் தாத்தா இருந்த பக்கம் திரும்பினான். இவை எல்லாம் ஒன்றும்

(15-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ மஹாதேவ தேஸாய் காலமானர்

இம்மாதம் 15-ந் தேதி காலை 8-40 மணிக்கு மகாத்மாவுடன் காவலில் வைக்கப்பட்டிருந்த மகாத்மாவின் அந்தரங்கக்காரிய தரிசியான ஸ்ரீ மஹாதேவ தேஸாய்காலகதியடைந்துவிட்டதாக பம்பாய் சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். மார்படைப்பினால் அவர் இறந்திருக்கக்கூடும் என அந்த அறிக்கை கூறுகிறது.

காவற்கூடத்திற்கு அருகிலேயே அவரது பிரேதம் தகனம் செய்யப்பட்டது. மகாத்மாவும் வந்திருந்தார்.

* * * *

நெருக்கடியைத் தீர்க்க

ஸர் ஸப்ரூ பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:—

புதிய டில்லியிலிருப்பவர்கள் சிறிது சிந்தனா சக்தியையும் தைரியத்தையும் காட்டி ஒரு மகாநாடு கூட்டியிருக்கலாம், அவர்கள் அப்படிச் செய்யாதது பற்றி வருந்துகிறேன். ஒரு வேளை, காலதாமதமின்றி நடவடிக்கை யெடுக்க அவர்கள் நினைத்திருக்கலாம். இப்பொழுது சாதாரண மக்களின் வாழ்க்கை கஷ்டமாகிவிட்டது. பல விடங்களில் காலாடித்தனம் வலுக்கிறது. ஏற்கனவே பல உயிர்கள் நாசமாகிவிட்டன; இது உண்மை.

விதேச சர்க்காராயிருந்தாலும், தேசிய சர்க்காராயிருந்தாலும் இந்த சமயத்தில் அமைதியை நிலை நிறுத்த நடவடிக்கை யெடுக்க வேண்டியிருக்கும். ஆனால் இந்த் மாதிரி சமயங்களில் சட்டத்தையும் அமைதியையும் நிலை நிறுத்த கடுமையான நடவடிக்கைகளும் பயமுறுத்தும் பேச்சும் மட்டும் பிரயோசனப் படாது. நிலைமையின் கடுமையைக் குறைத்துச் சொல்வது யாருக்கும் பயனளிக்காது.

இப்பொழுது ஏற்பட்டு வரும் நிகழ்ச்சிகள் மிகக் கடுமையானவை. அவற்றை அடக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் இப்பொழுது எழுந்திருக்கும் வெறுப்பையும் கோபத்தையும் ஜனங்கள் மனதிலிருந்து சுலபமாக அழிக்க முடியாது; மாஜிஸ்திரேட், போலீஸ் ராணுவம் இவைசெய்யவேண்டிய காரியங்களோடு ராஜதந்திரி"கள் செலுத்தவேண்டிய பொறுப்பு மிருக்கிறதென்பதை உணருவது நலம்.

இந்தியாவில் அமைதி நிலவுகிறதென இங்கிலாந்தில் சொல்லிக்கொண்டிருப்பது இரண்டு தேசங்களுக்கும் நன்மை விளைவிக்காது. பார்லிமெண்டு உடனே ஒரு தூதுகோஷ்டியை இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும்.

* * * *

பிரிட்டிஷ் தேசீய சமாதானசபை

லண்டன் தேசீய சமாதான சபை இந்தியாவில் தற்போதுள்ள நிலைபற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

"தற்போதைய தகராறைத் தீர்ப்பதுமட்டுமின்றி எல்லா ராஜீயக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் கொண்டதும், பொதுஜன மனோபாவத்தைப் பிரதிபலிப்பதுமான ஒரு இடைக்கால சர்க்காரை ஏற்படுத்தும் நோக்கத்துடன் சமரசப் பேச்சு துவக்க வேண்டும்" என்று அத் தீர்மானம் கூறுகிறது,

அச்சபையின் தலைவர் கேம்பிரிட்ஜ் வானசாஸ்திர புரபஸரான ஸர் ஆர்தர் எடிங்டன். உதவித் தலைவர்களில் பர்மிங்ஹாம் பிஷப், யூதர் தலைவரான ஹைர்ட்ஸ் இவர்களும் சேர்ந்தவர்களாவர்.

* * * *

விமானக் கப்பல் 'ஈகில்' மூழ்கியது

கடற்படை இலாகா வருத்தத்துடன் பின்வருமாறு ஆகஸ்ட் 12-ம் தேதி தெரிவிக்கிறது:—

22,000 டன் எடையுள்ள 'ஈகில்' என்ற பெயருள்ள பிரிட்டிஷ் விமான மேற்றிச் செல்லும் கப்பல் மத்தியதரைக் கடலில் ஒரு ஸப்மரீனால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது. இக்கப்பலிலிருந்தவர்களில் பலர் பத்திரமாக இருக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் வேலை செய்யும் ஸப்மரீன்களில் ஒன்றேனும் இதற்குள் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது. 'ஈகில்' என்ற கப்பல் முதலில் யுத்தக் கப்பலாக இருந்தது. இது 1913-ல் கட்ட ஆரம்பிக்கப்பட்டு 1924-ல் முடிக்கப்பட்டது. 1932-ல் இது விமான மேற்றிச் செல்லும் கப்பலாக மாற்றப்பட்டது. இது 2,26,000 டன் எடையுள்ளது. இதில் 748 மாலுமிகள் வேலை செய்வது சகஜம். இதில் 6 அங்குல பீரங்கிகள் 9 இருந்தன. 4 அங்குல விமான எதிர்ப்புப் பீரங்கிகள் நான்கும்,22 சிறிய பீரங்கிகளும் 21 விமானங்களுமிருந்தன.

எலிஸபெத் ராஜகுமாரி

தனத்க்ரேனடியர் கார்ட்ஸ் படைத் தலைவருடன் எலிஸபெத் ராஜகுமாரி கைகுலுக்கும் காட்சி. (இ. என். பி.)

இந்த இதழில் இருப்பவை

★

நிலைமை தெளிய வழி	(ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்)
கடும் நட்புப் பகை காட்டும்	(சீவக சிந்தாமணிக் கதை)
தாமரைப் பெண்	(சுதர்சன்)
தாசிப் பெண்	(சிறு கதை)
தாய் உள்ளம்	(தொடர் கதை)
ஸ்ரீ தியாகராஜ கீர்த்தனம்	(சங்கீதப் பகுதி)
ஜோதிர்மண்டலம்	(விசாகம்)
இப்படியும் செய்வாளா?	('ரேவதி')
பண்டைக்காலப் போர்முறை	(தி. நா. சுப்ரமணியம்)
பேருபகாரம்	(ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்)
பஹாமா பானத	(சினிமாக் கதை)
அடைபட்ட பூதம்	(சிறுவர் கதை)

* * * *

'மான்செஸ்டர்' மூழ்கியது

கடற்படை இலாகா அறிக்கை கூறுவதாவது:—சென்ற சில தினங்களாக மத்தியதரைக் கடலின் மேற்கு மத்தியப் பகுதியில் கடற்போர் நடந்தது.. ஆக்டிங் வைஸ் அட்மிரல் சிபிரட்டின் தலைமையில் நமது படைகள் வேலை செய்தன. இவற்றின் வேலையால் எதிரிகளின் தடை ஏற்பாடுகளையும் பொருட்படுத்தாமல் மால்டாக் கோட்டைக்குக் சப்ளைகளும் பல யுத்த விமானங்கள் உட்படவுள்ள உதவிப் படைகளும் பத்திரமாகப் போய்ச் சேர்ந்தன.

டிரூ என்பவரைக் காப்டனாகக் கொண்ட 'மான்செஸ்டர்' என்ற பிரிட்டிஷ் குரூய்ஸரும் சேதப்பட்டு பின் மூழ்கிப்போய் விட்டது. உயிர் தப்பிய பலர் மீட்கப்பட்டனர். வேறு சிலர் டூனிஸியா கரையை அடைந்திருப்பரென்று நம்பப்படுகிறது. விரோதியின் தளத்திற்கருகில் நடக்கும் போரில் சேதமில்லாதிருக்குமென்று எதிர்பார்க்க முடியாது.

'மான்செஸ்டர்'கப்பல் 1941-ல் பிலடலபியாவில் திரும்பிக் கட்டப்பட்டது. இதில் 700 மாலுமிகள் இருந்ததுடன் 6 அங்குல பீரங்கிகள். 12-ம் 4 அங்குல விமான எதிர்ப்பு பீரங்கிகள் 18-ம் 21 அங்குல டார்பிடோ குழாய்கள் 6ம் 21 பீரங்கிகளும் 3 விமானங்களுமிருந்தன.

* * * * *

இன்னொரு தீவு அமெரிக்கர் வசம்

அமெரிக்க கடற்படையினர் தற்போது பலப்படுத்தப்பட்டிருக்கின்றனர். சாலான் தீவில் துலாகி பிரதேசத்தில் ஜப்பானியர் பிடிப்பை அவர்கள் குலைத்து வருகிறார்கள், அவர்கள் துலாகி, ப்ளாரிடா, குடாலகனால் தீவுகளில் தங்களது நிலையை பலப்படுத்திக் கொண்டு முன்னேறிச் செல்லுகிறார்கள்.

மலேயாடா என்ற 4-வது தீவை அமெரிக்கர் வசப்படுத்தியிருக்கக் கூடும். 33-வருஷங்களுக்கு முன்பு இத்தீவில் நரபாமிஸ பக்ஷணிகள் இருந்த குடால்கானல் தீவிலுள்ள சிறந்தவிமானக் கூட்டத்தைக் கைப்பற்றுவதற்காக 5-மைல் நீளமுள்ள போர் முனையில் சண்டை நடக்கிறது. ஜப்பானிய விமானங்கள் நேசதேச நிலயங்களை உக்ரமாகத் தாக்கின. கைகலந்த போரில் ஜப்பானியர் அவர்களது அரண்களிலிருந்து துரத்தப்பட்டதாக ஆஸ்திரேலிய ரேடியோ தெரிவித்தது.

* * * *

ரஷ்ய யுத்தம்

ரஷ்யாவிலிருந்து கடைசியாக வந்த செய்தியிலிருந்து. கோடல்னிகோவோவுக்குத் தெற்கேயிருந்து ஜெர்மன் படைகள் ஆஸ்டிராகானை நோக்கி முன்

(16-ம் பக்கம் பார்க்க)

குருவிப் பாட்டு

★

ஸ்ரீ மு. அருணாசலம்

நம் மக்களிடையே ஒரு வகையான கடவுள் உணர்ச்சி இருந்து வருகிறது. ‘மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான்’ என்பது சாமானியமாக வழங்கும் பழமொழி. எதையும் நாமே கடைபோகக் காப்பாற்றி விடவில்லை. காக்கிற கடவுள் ஒருவன் இருக்கிறான் என்ற உணர்ச்சி மிக அழுத்தமாக நம் மனதில் இருந்து வருகிறது.

பழங் கதையொன்று இதைத் தெளிவாகக் காட்டும். ஆதி என்ற பெண்ணும் பகவன் என்ற ஆடவனும் மணம் புரிந்துகொண்டு சஞ்சாரம் செய்து வரும்போது, அவர்களுக்கு ஒரு குழந்தை பிறக்கிறது. இருவரும் முன்னமே செய்துகொண்ட சபதப்படி தாய் தன் குழந்தையை விட்டுப் பிரிந்து செல்லவேண்டியவளாகயிருக்கிறாள். தாயின் மனம் இளகியதல்லவா? குழந்தையைப் பிரிய மனம் வராமல் பெரிதும் கலங்குகிறாள். அப்போது குழந்தை தாயை நோக்கி “அம்மா, நீ ஏன் வீணே வருந்துகிறாய்? எல்லா உலகத்தையும், உயிர்களையும் படைத்த பரமன் என்னையும் படைத்திருக்கிறான். ஆகவே என்னைக் காக்கும் பொறுப்பு அவனுடையது. என்னை நினைத்து நீ வருந்தாதே. உன் வழியே நீ செல்” என்றுசொல்லிற்றும். இவ்வுண்மை தாய் அறியாததன்று. அறிந்திருந்த போதிலும், குழந்தையினிடத்துள்ள பாசம் காரணமாக, அதை மறந்து கவலையுறுகிறாள். குழந்தை தேற்றத் தேறுதல் அடைகிறாள் என்பது கதை.

இது ஒரு கற்பனைக் கதையாயினும், உண்மையை நன்றாய்க் காட்டுகிறது. தானில்லாவிட்டால் குழந்தையின் கதியென்ன? எப்படியெல்லாம் அது துன்பப்படும்? என்றெண்ணி தாய் வருந்துகிறாள். இது உலக இயற்கை. இதைப் போன்ற வேறு சந்தர்ப்பங்களும் எழுவது உண்டு. தனிப்பாடலொன்றைக் குறித்து மிக்க நயமானதொரு வரலாறு வழங்கி வருகிறது; அது எல்லோருக்கும் தெரிந்த வரலாறு.

ஓர் அரசன் (இவன் சாதாரணமான வள்ளலாகவும் இருக்கலாம்) புலவர் ஒருவரை நெடுநாளாக அன்போடு ஆதரித்து வருகிறான். அவருடைய புலமையைப் போற்றி, அவர் செய்த பாடல்களில் ஈடுபட்டு அனுபவித்து வருகிறான். புலவரும் இன்பமாக அவனோடு உடனுறைந்து வருகிறார். ஏதோ ஒரு சமயம், அரசன் புலவரை அசட்டை செய்ய நேர்ந்துவிட்டது. அவரை அசட்டை செய்ததுகூட பெரிதல்ல. அவருடைய பாடலை, என்ன காரணம்பற்றியோ அவன் இகழ்ந்துவிட்டான்! வேடிக்கையாகச் செய்த காரியமல்ல அது; வேண்டுமென்றே தமமை அவன் இகழ்ந்தான் என்று அவர் எண்ணிக் கொண்டார். மிக்க கோபமுண்டாகிவிட்டது. இனி இவனோடு இருத்தல் தகாது என்றெண்ணி புலவர் வெளியே கிளம்புகிறார்.

அரசன் பார்த்தான். அவனும் இவரை ஏதோ கவனக் குறைவினாலே அசட்டை செய்ய நேர்ந்ததே ஒழிய, முனைப்பூர்வமாக இவரைக் குறைவுபடுத்த எண்ணினவனல்லன். “ஐயோ, இவ்வளவு நாட்கள் இங்கு சுகமாய்க் காலங்கழித்துக் கொண்டிருந்துவிட்டு, இப்போது எங்கே போகப் போகிறீர்கள்? எங்கே போனாலும் தங்களுக்குத் துன்பந்தானே!” என்று சொல்லி, அவருடைய சினத்தைத் தணித்து அங்கேயே இருக்கச் செய்யலாமென்று பார்க்கிறான். அவருடைய கோபமோ இவன் சொல்லச் சொல்ல வளர்ந்துகொண்டே போகிறது!

“அரசே! வேறு யாரும் என்னை ஆதரிக்கமாட்டார்கள்! நீ ஒருவன்தான் என்னை ஆதரிக்க முடியும் என்று இறுமாப்பினாலல்லவா என்னை இகழ்ந்து இப்படிப் பேசுகிறாய்? நீ ஒருவன்தானா உலகத்தில் தராதரமறிந்து ஆதரவு செய்பவன்? உனக்குமட்டுந்தானா வளமாகநாடும், நிலமும் நீரும் அமைந்திருக்கின்றன? இல்லை. உன்னை மகிழ்விப்பதற்காகவா? நான் இதுகாறும் கவிதை எழுதிவந்தேன்? அறியாமல் இறுமாந்து பேசுகிறாயே! உலகம் எவ்வளவு விரிந்தது? அதில் எத்தனையோ ஒப்பற்ற வள்ளல்கள் என்னுடைய கவிதையை அனுபவிக்கத் தெரிந்தவர்கள், என்னைப் போற்றி ஆதரிக்க சித்தமாயிருக்கிறார்கள். கற்றோருக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு என்பது உனக்குத் தெரியாதா? நீ தான் என்னை ஆதரிக்க முடியும், இல்லையென்றால் எனக்கு வேறு கதியில்லையென்று எண்ணிவிடாதே” என்று சீற்றத்தோடு பேசுகிறார்.

மன்னவனும் நீயோ?
வளநாடும் உன்னதோ?
உன்னையறிந் தோ தமிழை
ஓதினேன்?—என்னைப்
பரிந்தேற்றுக் கொள்ளாப்
பதியுண்டோ? உண்டோ
விரைந்தேற்றுக் கொள்ளாத
வேந்து! *

என்றார். [சோழனைக் குறித்து கம்பர் இப்படிச் சொன்னாரென்று வழங்குவதுண்டு. கம்பர் தம்மை ஆதரிக்க ஆளில்லாமல் திண்டாடிய அப்பாவியல்லர்; எந்தச் சோழனுமே புலவர் மனங் கோணாமல் பழகத் தெரியாத அசடுமல்லன்; ஆகவே, இதைக் கம்பர் பாடினாரென்றோ, சோழனைப் பார்த்துப் புலவர் பாடினாரென்றோ கொள்ளவேண்டிய அவசியமே யில்லை.]

இது பழங் காலத்துக் கதை. காலத்துக்குக் காலம், மக்களின் உள்ளப் பண்பு மாறுபடாவிட்டாலுங் கூட, சந்தர்ப்பங்கள் மாறுபடுகின்றன அல்லவா? இந்தக் கதையின் உட்கோள் இக்காலத்துக்கும் பொருந்தும்; ஆனால், இன்று புலவருமில்லை, வள்ளலுமில்லை; வள்ளலை எதிர்பார்த்து வாழ்க்கை நடத்தும் புலவர் கிடையாது. ஆனால் வேறு எப்படிப்பட்ட சந்தர்ப்பம் என்பதையும் பார்க்கலாம்.

கதைப்புத்தகங்களும் கட்டுரைத் தொகுதிகளும் இந்தக்காலத்திலே ஏராளமாக வெளிவருகின்றன. இவை வெளிவர அனுகூலமாயிருப்பவை பத்திரிகைகள். இக்காலத்தை, ஒரு வகையில் பத்திரிகைகளின் யுகமென்று கூடச் சொல்லிவிடலாம். இந்தப் பத்திரிகை யுகத்திலே ஒரு பத்திரிகையின் உரிமையாளர் எழுத்துத் திறமைவாய்ந்த ஆசிரியரொருவரைத் துணையாசிரியராக அமர்த்தி, பத்திரிகையை நடத்தி வருகிறார். நயமாகக் கட்டுரை எழுதுவதிலும், திறமையாகக் கதைகள் கட்டுவதிலும் இத்துணையாசிரியர் நல்ல புகழ்பெறுகிறார். இந்த நிலையிலே, பத்திரிகையின் உரிமையாளர், ஏதோ காரணம்பற்றி, துணையாசிரியரை நீக்கிவிடுகிறாரென்று வைத்துக்கொள்வோம். நீக்கப்பட்ட ஆசிரியருக்கு, உள்ளபடியே பல தொந்தரவுகள் ஏற்படவே செய்யும். தருணம் வாய்த்தால் அவர் தம்மை நீக்கிய செயல் எவ்வளவு அநியாயமானதென்பதை எடுத்துச் சொல்லவும், எழுதவும் கூடும். இவருக்கும் பாடுகிற ஆற்றல் இருக்குமானால், பண்டைக் காலத்திலே அரசன் மீது கோபித்துச் சென்ற புலவர் பாடியது போலப் பாடவுங் கூடும். எப்படிப் பாடியிருப்பாரென்று நாம் சற்றுக் கற்பனை செய்து பார்க்கலாமல்லவா?

“ஆசிரியர் நீரோ? இங்(கு)
அச்சகமும் உம்மதோ?
காசினிமேல் உம்மையோ
கண்டிருந்தேன்—
தேசத்தோர்
என் கதையைக் கற்ற
பின்னர்

கிட்டியது கவர்னர் பதவி

சென்னைக் கவர்னரின் ஆலோசனையாளரான மிஸ்டர் டி. ஜி ரூதர் போர்டு பீஹார் மாகாண கவர்னராக வேலை பார்க்க நியமிக்கப்பட்டிருக்கிறார். பி.பி.பி.

எக்களிப்புற் றென்னை
எதிர்
கொண்டழைத்துக்
கொள்ளாரோ கூடி?”

என்று பாடியிருப்பார்; கடைசி அடி முற்றும் நேர்ந்த அமையும்படியாகவே பாடியிருப்பார்.

இந்தக் கற்பனைச் சம்பவமும், இலக்கியத்தில் கண்ட நிகழ்ச்சியும் ஒருபுறமிருக்க, “குருவிப் பாட்டு” என்று வாய் மொழியாகவே வழங்கி வந்துள்ள பழையதொரு சிறு பாடலிலும் இதே நிலையைக் காண்கிறோம். மனிதனிடத்துள்ள இயல்புகளை மற்ற உயிர்களின்மீதும் ஏற்றிச் சொல்வது மரபல்லவா?

ஒருகுளம். அதை யொட்டி எத்தனையோ குருவிகள் உயிர் வாழ்ந்து வந்தன. எங்கேயிருந்தோ தண்ணீர் கொண்டு வரும் ஒரு வாய்க்காலையும் அதைச் சுற்றியுள்ள சில வயல்களையும் நம்பி, மக்களாகிய நாம் எத்தனை பேர் எத்தனை குடிகள், வாழ்ந்து வருகிறோம்! சிற்றூர்களும் பேரூர்களுமாக எத்தனையோ ஊர்கள் தோன்றிவிடுகின்றன! இதைப் போலவே, குளக்கரையைச் சுற்றிலுமுள்ள மரங்களில் கூடு கட்டிக்கொண்டு, எத்தனையோ குருவிகள் உயிர் வாழ்கின்றன! குளத்தில் கிடைக்கும் மீன், முதலியனவே இவற்றுக்கு ஆகாரம்.

மழையில்லாமல் ஒரு வருஷம் நீர் வறட்சி ஏற்பட்டுவிட்டது. கடுங் கோடை. குளத்திலுள்ள நீர் நாளுக்கு நாள் சுண்டிக்கொண்டே வருகிறது. இப்படி நீர் வற்றிக் கொண்டே வந்தால், ஒரு நாள் குளத்தில் தண்ணீர் அறவே இல்லாது போய் விடும். மீன்கள் யாவும் அதற்குள் அற்றுப் போய் விடும். அப்போது இந்தச் சிறு குருவிகளெல்லாம் ஆகாரத்துக்கும் நீருக்கும் என்ன செய்யும்?

இதை நினைத்துப்பார்த்து; அந்தக்குளமே குருவிகளை நோக்கிக் கேட்டதாம். “ஐயோ! என்னிடமுள்ள நீரெல்லாம் வற்றிப்போகிறதே! என்னை நம்பி இதுவரையில் உயிர்வாழ்ந்த நீங்கள் இனி என்ன செய்வீர்கள்! எங்கே போய் இரை எடுப்பீர்கள்?” என்று மிக்க பரிவோடு கேட்டதாம். குருவிகளுக்கு, இதைக்கேட்டபோது, உண்மையிலே சற்று அச்சம் பிறந்தது. இதுவரையில் கவலையற்றுப் பொழுது போக்கிவிட்டு, இனி இரைக்காகத் திண்டாடுவதென்றால்? இந்த நிலைமையை அவை முன்னமே எண்ணிப் பார்க்கவில்லை.

ஒரு குருவிமட்டும் சிறிது துணிச்சலுள்ளது. சிறிதுகூட அச்சமோ, கவலையோ அதற்கு ஏற்படவில்லை. ஆதி என்ற தாய்க்குக் குழந்தை ஆறுதல் சொன்னது போலவே, இக் குருவியும் சொல்லுகிறது. “நீர் வறண்டு போகிறதே என்ற கவலை இக் குளத்துக்கு எதற்காக? குளமானது நீரைத்தானாகவா உற்பத்திசெய்து கொண்டது? இல்லையே! ஏதோ இயற்கை நியதியொன்றிருக்கிறது. அதன்படியே உலகத்தில் எல்லா நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. கடுங்கோடையினாலே இப்போது நீரெல்லாம் வற்றிப்போவது உண்மைதான். ஆனால் என்ன மோசம் வந்து விட்டது? கோடை காலம் முடிந்ததும் மழைக்காலம் தானே தொடர்ந்து வருகிறது! மழை பெய்வதற்குத் தயாராய் மேகங்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. மழை பெய்தவுடனே, மலையிலிருந்து வெள்ளம் திரண்டு ஆறுகளிலும் வாய்க்கால்களிலும் நிரம்பிப் பெருக்கெடுத்து வரப் போகிறது! கடலிலிருந்து எத்தனையோ வகையானமீன்கள் ஆற்று வெள்ளத்திலே எதிர்த்துவந்து சேரப் போகின்றன. எதிர்த்துவந்த மீன்கள் ஆறுகளில் மட்டுமன்றிக் குளங்களிலும், குட்டைகளிலும் தங்கி, ஒன்று பலவாய்ப் பெருகப் போகின்றன! இப்படி இயற்கை நியதியின் துணைகொண்டு, குருவிகளுக்கேற்படக்கூடிய உணவுப் பஞ்சம் தீரப்போகிறது. எனவே, குருவிகளுக்குத் தீனிக்கு வகையில்லையே என்றெண்ணிக் குளமானது வீணில் கவலைப்படுவானேன்?

‘இந்த எண்ணத்தோடு, குருவியானது அலட்சியமாகக் குளத்துக்குப் பதில் சொல்லுகிறதென்பதாக பாவம்:

மாரி மழை பெய்யாதோ?
மலைவெள்ளம் வாராதோ?
ஏறுமீன் ஏறாதோ?
எங்கள் பஞ்சம் தீராதோ?*

எத்தகையதொரு துணிச்சலும், அலட்சியமும் இப்பாடலில் தொனிக்கின்றன!

இது குருவிப்பாடலென்று வாய்மொழியாக வழங்குகிற ஒரு சாதாரணப் பாடல்தான்! ஆனாலும் மக்களிடையே உள்ள அரியதோர் இயல்பை நுட்பமாகக் காட்டுகிறது. மனித சமூகத்தின் இதயத்துக்குள்ளே புகுந்து நின்று குருவியானது எடுத்துச் சொல்லுகிற அரிய உண்மையை நாம் அனுபவிக்க முடிகிறது.

[* இப்பாடலைத் தெரிவித்தவர் கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை.]

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

காலையில் எழுந்தவுடன்

காலையில் எழுந்தவுடன் நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம் டீ அருந்துவதே. இரவிலுண்டான அசக்தியை முற்றிலும் போக்கி, சுரு சுருப்புடன் உங்கள் பகல் வேலைகளைக் கவனிக்க தயார் செய்ய வல்ல உயரிய பானம் டீயே ★

எங்கள் புதிய பிரசுரமாகிய “டீ அருந்துவதற்கான சமயங்கள்” என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில், டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப்பற்றி இங்கிலீஷில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பினால், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார்: கமிஷனர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.

இந்தியன் டீ
அருந்துங்கள்
புத்துயிரளிக்கும் உயரிய பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது
IK 156

திட்டமான வாழ்க்கை

(வ. ரா. எழுதியது)



வ. ரா.

வாரப்பதிப்பு வாசகர்களுக்கு ஒரு நல்விருந்து. வ. ரா தொடர்ந்து சில வியாஸங்கள் எழுத இசைந்துள்ளார். வ. ரா. வைத் தமிழ் உலகத்திற்கு அறிமுகப்படுத்தத் தேவையில்லை. பாரதியை அறிந்த தமிழ் மக்கள் அவரை அறியாமலிருக்க முடியாது. பால்யத்தில் பாரதியைக் குருவாக வரித்து அவருடைய சாயா பலம் பெற்று குரு தக்ஷிணை இன்றும் செலுத்தி வருகிறார். பாரதி என்றால் போதும்! அலாதி உற்சாகம்; அடக்க முடியாத ஆனந்தம். பாரதியின் சிலுவையைத் தாங்கிச் செல்வதோடு நிற்கவில்லை. பாரதியின் சக்தியின் சாயையும் அவரிடம் காணலாம். விசையும் வீச்சும் கண்ட எழுத்தாளர். அவர் ஆண்டு வரும் எழுதுகோல் கூர்கோண்டது. தோய்த்தெழுதும் மசி சமுதாய சீர்கேடு. கட்டுரைகள் கவர்ச்சியுள்ளவை. ஆழம் நிறைந்த கருத்துக்களை காணலாம். ஒரு முறைக்குப் பல முறைகள் படிக்கலாம். படிக்கப் படிக்க புதிய புதிய கருத்துக்கள் புலனாகும். படியுங்கள்! படித்து சிந்தியுங்கள்; சிந்தனை செயலளவுக்கு இறுகட்டும்.

[ப—ர்]

கல்கத்தா நகரின் பேரில் ஜப்பானியர்கள் விமானங்களிலிருந்து குண்டு வீசிய காலத்தில், நண்பர் ஒருவர் என்னிடம் ஓடோடியும் வந்து, "என்ன வ. ரா! கேட்டீர்களா கதையை? ஆனூரானுக்கு தேள் கொட்ட, தோ ஊரானுக்கு தொடையில் கடுத்தசங்கதிமாதிரி, சென்னையில் ஆகிவிட்டது. சென்னையில், ஒரு பகுதியில் இருந்த பாங்கி ஒன்றில், ஏராளமாக ஜனங்கள் நின்று கொண்டு தாங்கள் போட்ட பணத்தை பாங்கியிலிருந்து, எடுத்து விட்டு, கிலிபிடித்து அலைகிறார்கள். கல்கத்தாவில் ஜப்பானியன் வெடி போட, சென்னையில், ஒரு பாங்கியில், இந்தமாதிரி 'இடி' விழுவானேன்! என்ன அனியாயம்? ஜனங்கள் இப்படி ஏன் நிதானம் தவறிப் போய் பதற வேண்டும்' என்று சற்று பரபரப்புடன் கேட்டார். "எத்தனை பாகிஸ்தான்பிரச்னைகள் தோன்றினாலும், ஹிந்துஸ்தானம் என்பது பிரிக்க முடியாத ஒன்று என்பதை, இந்நிகழ்ச்சிகாண்பிக்கிறது. கல்கத்தாவில் வெடிகுண்டுகள் வெடித்தால், சென்னையில் 'பணவாபஸ்' இடிகள் இடிப்பது உடனுணர்ச்சியை காண்பிக்கிறது" என்றேன்.

நண்பருக்கு ஆத்திரம். 'ஏன் இப்படி கையாண்டி செய்கிறீர்கள்? கிண்டல் மனப்பான்மையைக் கொண்டு, நீங்கள் இந்த சம்பவத்தை கவனித்தல் தகுமா' என்று நண்பர் சிறிது கோபத்தோடும், பெரும்பகுதி வருத்தத்தோடும் கேட்டார். "நீர் வருத்தப் படுவதை நான் போற்றுகிறேன். நான் சொல்லுவதை நிதானமாகக் கேளும். சென்னை சம்பவத்தைப்பற்றி, 'என்ன அநியாயம்' என்று மனம் புழுங்குகிறீர். தினசரி நடப்பது ஒன்றை நீர் கவனித்ததில்லை போலிருக்கிறது. வழியிலே போகிற பைத்தியக்காரனிடம் நம்மவர்கள் எப்படி பழகுகிறார்கள்? கல்லை அவன் பேரில் எறிகிறார்கள்; கைகளை தட்டி கூச்சல் உண்டாக்குகிறார்கள்; அவனை வளைத்துக் கொண்டு, சிரிக்கிறார்கள்; இன்னும் என்னன்னமோ, வாய்க்கு வராத சொற்களால் அவனைப் பார்த்து கேலி செய்கிறார்கள். இந்த வெறிபிடித்த களியாட்டத்தில், இரண்டொரு பெரியவர்களைத்தவிர மற்ற எல்லோரும் கலந்து கொள்ளுகிறார்கள். இந்த அநியாயத்தை நீர் பார்த்ததில்லையா" என்றேன்.

நண்பரின் கண் விழிப்பு

இதைக் கேட்டவுடன், நண்பர் சிறிது நேரம் மௌனமாய் இருந்தார். பிறகு அவர் சொன்னார்:—"நீங்கள் குறிப்பிடுவது தெரிகிறது. ஒரு நிகழ்ச்சி சம்பந்தமாக, தகாத முறையில் உணர்ச்சியை வெளிக் காண்பிக்கும் நோய், நம்முடைய சமாஜத்தில் வெகு காலமாக இருந்து வருவதால் தான், இவ்வாறு நேருகின்றது என்கிறீர்கள். ஜப்பானியன் கல்கத்தாவில் வெடி குண்டு போட்டால் அதைக் கேட்டு (கண்டல்ல!) சென்னையில் பீதியடைந்து பரபரப்பில் அகப்பட்டுக் கொள்வதும் பைத்தியத்தைக் கண்டு கேலி செய்வதும் சம தட்டுகளில் எடைபோடக் கூடிய தவறுகள் என்று நீங்கள் குறிப்பால் உணர்த்துகிறீர்கள்; நான் சொல்லுவது சரிதானே?"

'நீர் குறிப்பிட்டது சரிதான் என்றேன். 'அப்படியானால், இதற்கு விமோசனம் கிடையாதா'? என்றார் நண்பர். "கண்டிப்பாய் உண்டு. விமோசனம் இல்லையாயின் ஹிந்துஸ்தானத்தில் வாழும் மக்கள் அனைவரும் (பாகிஸ்தான் ஜின்னா உள்பட) அந்நியர்களுக்கு நிரந்தர அடிமைகளாக வாழ நேரிடும். இல்லாமல் போனால், மண்ணோடு மண்ணாய்க் கலந்துநாசமாய்ப் போக நேரிடும்" என்றேன்.

'பயங்கரமான சாபம் கொடுக்கிறீர்களே' என்று நண்பர் சற்று வெறுப்போடு, என்னைக் கேட்டார். "என் இனத்தார், என் தேசத்தார் செழிப்புடன் வாழ்வதில் எனக்கு பொறாமையா? அதனால் நான் சாபம் கொடுக்கிறேனா? அந்த அவலக்ஷணமான பேதமை என்னிடம் இல்லை. என் நாட்டார், தலை நிமிர்ந்து, உலகத்தின் நன் மதிப்புக்கு பாத்திரர்களாக வாழ வேண்டும் என்பதுதான் எனது இருபத்து நான்கு மணி நேர ஆசை. தூக்கத்திலும், இதைத்தான், நான் கனவு காண்கின்றேன். நான் கூறிய முடிவு தர்க்க சாஸ்திரமாகும். ஜோஸியம் அல்ல; ஆரூடம் அல்ல; சாபமும் அல்ல. உலகத்தில் தற்போது நடமாடும் வாழ்க்கைத் தத்துவங்களைப் பார்த்தால் பயமாயிருக்கிறது. அந்தந்த தத்துவத்தின்படி, நாடுகள் தங்களை அரண் செய்து கொண்டு, சிறிது காலம் கழித்து அயல் நாடுகளின் பேரில் ஆக்கிரமித்து, அவைகளை அடிமைப்படுத்த முயல்கின்றன. இந்த வெறியை, நமது ஹிந்துஸ்தானத்தில் வாழும் ஜனங்கள் எப்படித் தாங்கப் போகிறார்கள்? எவ்வாறு தடுத்து, தங்களைக் காப்பாற்றிக் கொள்ளப் போகிறார்கள் என்பதுதான் நமது கண் முன்னே, தற்சமயம் இருக்க வேண்டிய பிரச்னையாகும்" என்றேன்.

'தெளிவு படுத்துங்கள்'

'பொதுப் படையாகப் பேசாமல், விஷயத்தைத் தெளிவு படுத்துங்கள். பயத்தைக் காண்பித்து, மனிதனை சீர்திருத்தப் பார்ப்பதும் அல்லது தன்வசப்படுத்த எத்தனிப்பதும் நாகரிகமான முயற்சி அல்ல. உலகத்திலே பல பகுதிகளில், வெறி பிடித்து ஆட்டினால், அதற்காக நாமும் அதே ஓட்டி தாளம் போட வேண்டுமென்பதுண்டா?' என்று நண்பர் சற்று சூத்தலாகச் சொன்னார். "நன்றாகச் சொன்னீர். நம்மவர்கள் ஒரு நாளும் தாளம் போடக் கூடாது. இதைத்தான் நான் சொல்லுகிறேன். சென்னை பரபரப்பு, கல்கத்தா வெடிக்கு தாளம் என்பது உமக்குத் தோன்றவில்லையா? இதைத்தான், ஜப்பானியன் எதிர் பார்த்தான். இதையே, ஹிட்லர் எதிர் பார்க்கிறார். இந்திய அரசியல் சம்பந்தமாக, இந்த தாளத்தையே, இந்திய மந்திரி அமெரிப் பெரியாரும் நம்மவர்களிடமிருந்து எதிர் பார்க்கிறார். பிறர் பாட்டுக்கு, தாளம் போட்டுக் கொண்டு, நம்மவர்கள் இனியும் வாழலாகாது. அதற்கு வழியைச் சொல்லுங்கள்" என்றேன்.

'நம்ம கைக்குள் அரசியல் நிர்வாகப் பொறுப்பு வந்து விட்டது மாதிரி பேசுகிறீர்களே! யுத்தம் முடிந்து, எல்லா நாடுகளும் முடிவடையட்டுமே! பிறகு, இந்த பிரச்னையைப்பற்றி யோசித்துக் கொள்ளலாம்' என்று நண்பர், புன்சிரிப்போடு சொன்னார். "இரும்பு சூடாய் இருக்கிற சமயத்திலே தான், அதைத்தட்டி நீட்டலாம். மேலும் ஆறின கஞ்சி பழங் கஞ்சி. நம்மவர்களுக்கு, தற்போது அரசியல் பொறுப்பு இல்லை என்ற காரணத்தினால், 'யுத்த காலம்' என்ற சாக்கை வைத்துக்கொண்டு, ஜன நிர்மாண பிரச்னையைப் பற்றி யோசனைகூட செய்யக் கூடாதோ' என்றேன்.

பிலிப்ஸ் பிரசன்னம்



இவர் ஜனாதிபதி ரூஸ்வெல்டின் பிரதிநிதி மிஸ்டர் பிலிட்ஸ் தான். இந்தியா இவருக்குப் புதிசு. இவர் நமக்குப் புதியவர். சமீபத்தில் இவர் விஜயம் செய்த்தும் அவரை இந்தியாவிலுள்ள ஜெனரல் பெஞ்சாபின் வரவேற்றார்.

'நீங்களும் நானும் இந்த விஷயத்தைப்பற்றி, யோசித்தால் மட்டும் போதுமா? மேலும், மிகமிகப் பெரியார்கள் செய்யவேண்டிய, செய்யக்கூடிய வேலையை, நம்மால் செய்ய முடியுமா? குருவி பனங்காயைத் தூக்குவது மாதிரி ஆகிவிடுமல்லவா' என்று நண்பர் சிறிது தாழ்மைக்குரலோடு பேசினார். 'ஆசையும் பயமும் எல்லாருக்கும் பொதுவானவை. அதில் சிறியார், பெரியார் என்ற வித்தியாசம் கிடையாது. பயத்தைப் போக்குவதும் ஆசையைப் பூர்த்தி செய்யப்பார்ப்பதும் தான் மனித வர்க்கம் இவ்வளவு காலமாக செய்து வரும் வேலையாகும். நம்முடைய ஆசையும் பயமும் எந்த நிலையில் இருக்கின்றனவோ, அதே ஆசையும் பயமும் தான், இங்கிலீஷ் பிரதம மந்திர சர்ச்சில் உள்ளத்தில் வேறுவகையில் குடி கொண்டிருக்கின்றன. இவைகளை, சாம்ராஜ்யம் என்ற திட்டத்தின் மூலமாக, பூர்த்திசெய்து கொள்ளலாம் என்று அவர் கருதுகிறார். ஹிட்லர், ஸ்டாலின், டோஜோ, ரூஸ்வெல்ட் முதலியவர்கள் வெவ்வேறு வகை திட்டங்களைக் கொண்டு, பயத்தைப்போக்கி ஆசையைப் பூர்த்திசெய்து கொள்ளலாம் என்று கனவு காண்கிறார்கள்......

'அப்புறம்! அவசரமாய்ப் பேசாதேயுங்கள்' என்று நண்பர் இடைமறித்தார்.

நல்லது! மெதுவாகப் பேசுகிறேன். மேலே சொன்னவர்கள், தங்கள் நாட்டார்களின், தங்கள் இனத்தாரின் பயங்களைப் போக்கி, அவர்களுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்ளப் பார்ப்பதாகத் தான் தோன்றுகிறது. அவர்களுடைய திட்டங்களின் மூலமாக, நம்மவர்கள் தங்கள் பயத்தைப் போக்கிக் கொண்டு ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியுமா என்பது கேள்வி. முடியாது என்பது நான் வந்திருக்கும் முடிவு. ஆகவே நாமும் நமக்குத் தேவையான, நமது நாட்டின் நாகரிகப் போக்குக்கு இசைந்ததாக, வாழ்க்கைத் தத்துவத்தை அமைத்துக் கொண்டு, அந்த அஸ்திவாரத்தின் பேரில், வாழ்க்கைத் திட்டமொன்றை நிறுவிக் கொண்டாலொழிய டோஜோ, ஹிட்லர் போன்ற பேராசைக்காரர்களுக்கு நமது நாட்டார் பலியாவது நிச்சயம். தப்பவே முடியாது" என்றேன்.

திட்டம் இல்லையா?

'ஏற்கன்வே, நமக்கு வாழ்க்கைத் திட்டம் இருந்ததில்லையா' என்று நண்பர் கேட்டார். 'இருந்தது. அதற்கு ஸனாதன தர்மம் என்று பெயர். அது ஆண்டு மாறிப் போன திட்டம். இனி அதனால் நற்பயன் கிடைக்காது; விபரீத பலன்கள்தான் விளையும். மேலும் ஸனாதன தர்மம் என்பது கிராம நாகரிகம் என்பதையும் 'பரலோக ஆசையையும்' அடிப்படையாகக் கொண்டதாகும். இயந்திர சகாப்தமான இந்தக் காலத்தில் கிராம நாகரிகம் பெயர் சொல்ல முடியாது. அந்த நாணல் புல்லைக் கொண்டு நம்மவர்கள் கரையேறவே முடியாது. மேலும் 'பரலோக ஆசையால்' நம்மவர்கள் மண்ணில் பதர்களாக வாழ்கின்றார்கள். கல்கத்தா வெடியும், சென்னை 'இடியும்' இதற்கு அத்தாக்ஷி. பழைய வாழ்க்கைத் திட்டத்தை, மகாத்மா காந்தி ஓரளவில் மாற்றப் பார்த்து, அவர் புதிய திட்டமொன்றை ஆக்கி வைத்திருக்கிறார். அந்த திட்டத்துக்கு அடிப்படையாக இருப்பது பூரண அஹிம்சையாகும். அந்த அஹிம்சை, எல்லோருக்கும் சாத்தியப் படக்கூடியதல்ல. எனவே, காந்தியின் புதிய திட்டத்தையும் நம்மவர்கள், பூரணமாக ஏற்றுக்கொண்டு, வாழ்ந்து வெற்றி பெற முடியாது" என்றேன்.

'ஆகவே' என்று நண்பர் பெருமூச்சு விட்டார். 'ஆகவே புதிய வாழ்க்கைத் திட்டம் தேவை. அதை நீரும் நானும், நம்மைப்போல வாடி வதங்குபவர்கள் எல்லாரும் சேர்ந்து யோசித்து, பெரியார்களின் அரங்கத்துக்குஅனுப்ப வேண்டும். பாவனை அடக்கத்தால், நாம் சிறியவர்கள் என்று எண்ணிக் கொண்டு, நமது பொறுப்பைக் கழித்து நாம், கோழைகளாகவும் யோசிக்க இயல்பில்லாதவர்களாகவும் இருக்க வேண்டாம்' என்றேன்.

'அப்பாடா' என்றார் நண்பர்.

அட்டைப் படம்

அட்டைப் படத்திலிருப்பவர் யாரென்று தெரிகிறதா? லெப்டினென்டு ஜெனரல் ஸர் நோயல் பெரிஸ்போர்டு பியர்ஸி. கே பி ஈ., ஸி, பி. டி. எஸ் ஓ அடேயப்பா எவ்வளவு பெரிய பெயர்! எவ்வளவு பட்டங்கள்! பயப்படவேண்டியதில்லை. இருக்கும் பயத்தைப் போக்கவந்திருப்பவா தான இவர்.

பம்பாய், சென்னை ராஜதானிகளைப் பாதுகாப்பதறகாக ஓர் படை இருக்கிறது. அந்தப் பாதுகாப்புப் படைத்தலைவரே ஸர் பெரிஸ் போர்டு. இவருக்கு வயது 55. 1907-ம் வருஷத்தில் முதன் முதலில் பிரிட்டிஷ் பீரங்கிப் படையில் சேவை செய்தார். தென் ஆப்ரிக்காப் போரிலும் 1914-18 வருஷங்களில் நடந்த மகாயுத்தத்திலும் சேவை செய்திருக்கிறார்.

பாக்தாத் நகரம் பிடிக்கப் பட்ட பிறகு டி. எஸ் ஓ., என்ற பட்டம் பெற்றார். 1929-ம் ஆண்டில் யுத்தக் காரியாலயத்தில சேர்ந்தார.

1936-ம வருஷத்தில் பீரங்கிப் பட்டாளத்தின் தலைவராக இந்தியா வந்தார். 1940-ல் வெளி நாடடுக்குச் சென்று 4-வது இநதியப படைத் தலைவராயிருநதார். 1940-ம் வருஷம் ஆகஸட மாதத்தில் ஸிடிபரானியைப் பிடித்து கே. பி. ஈ. என்ற பட்டத்தைப பெறறார். 4-வது இந்திய டிவிஷன் அகார்டாட, கிரன் என்ற இடங்களைப பிடித்த போது அப்படைக்கு ஸர நோயல் தான் தலைவராயிருந்தார்.

1941-ம வருஷத்தில் மேற்குப் பாலைவனத்திலுள்ள படைகளுக்குத் தலைமை தாஙகினார். பிறகு இவர் இந்தியா வந்தார். தெற்கு பிரதேச ராணுவத் தலைமை அதிகாரியாக இபபோது பதவி வகிக்கிறார்.

'மீண்டும்மீண்டும்முன்னேறித் தாக்கு''வதே இவரது லடசியம்.

குளிர், ஜலிப்பு சீக்கிரம் குணமாகும்.



பிரதி இரவும் படுக்கு முன் ஜாம்-பேக் தேயுங்கள்.

படுக்குமுன் மார்பிலும், தொண்டையிலும் ஜாம்-பெக் தேய்த்துக் கடுமையான ஜலிப்பைப் போக்கலாம். ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகை ஆயில்களை சருமம் சுலபமாக இழுத்துக்கொண்டு சரும உஷ்ணத்தால் ஆவியாக மாறுகிறது. இதை சுவாசித்தவுடன், மூச்சு விடுவது சுலபமாகிறது. மண்டை கனம் குறைகிறது. ஜாம்-பெக் ஜலிப்பு, இன்புளூயென்ஸா கிருமிகளை ஒழித்துவிடுகிறது. விலை ரூ. 1 அல்லது 2—4. ஸோப் ரூ. 1. பவுடர் ரூ. 1. ஏஜண்டுகள்:—மெஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ். எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.

பொய்யோ! மெய்யோ!!

நாயின் அற்புத சேவை

நாய்களுக்குள்ள விச்வாசம், அறிவு இவைபற்றி எவ்வளவோ கதைகளைக் கேட்டிருக்கிறீர்கள்! இதையும் அத்துடன் சேர்த்துக் கொள்ளுங்கள்! ஆனால் இது கதை அல்ல; கயிறுமல்ல! உண்மையாக நடந்தது விவரம்தான்.

ஒரு நாள் ஒரு நாய் ஆற்றங்கரை வழியாகப் போய்க்கொண்டிருந்தது. நாய்தான் காரியம் ஏதுமில்லாமலிருந்தாலும் கன வேகமாக ஏதோ காரியத்தைக் கவனிக்கப்போவதுபோல் போய்க்கொண்டிருக்குமே! ஆனால் இங்கு கூறப்படும் நாய் அப்படியல்ல. தன் உயிரையே திரணமாக நினைத்து ஒரு சிறுவனுடைய உயிரைக் காப்பாற்றியது! சிறுவன் ஒருவன் கால் வழுக்கி ஆற்றில் விழுந்துவிட்டான். அவன் கூக்குரலிட்டான். இந்தக் கூச்சல் அவ்வழியே போன நாயின் காதில் விழுந்தது. உடனே அது தண்ணீரில் குதித்து நீந்தி பையனின் சட்டைக் காலரைக் கௌவிக்கொண்டு கரைக்குவந்துவிட்டது. சிறுவன் கரைக்கு வந்ததும் ஜனங்கள் அவனுக்கு சிகிச்சைகள் செய்தனர். நாயும் கூடவே இருந்து அவனது கைகளையும் முகத்தையும் நக்கியது. சிறுவன் கண் விழிக்கும் வரை அங்கிருந்து கொண்டே 'வாள் வாள்' என்று குரைத்துக்கொண்டே நின்றது. சிறுவனை வீட்டுக்குக் கொண்டு போனார்கள். நாயும் பின்னோடு போய் விட்டது. சிறுவனின் பெற்றோருக்கு விவரம் கேட்டதும் ஆச்சர்யம் தாங்கவில்லை! நாயை அவர்கள் தூக்கி எடுத்துக்கொண்டு அதற்குப் பாலூட்ட முயன்றனர். ஆனால் அது சிறுவன் படுத்திருந்த கட்டிலில் ஏறிக்கொண்டு குரைக்க ஆரம்பித்தது. சிறுவன் பிரக்ஞை பெற்று அதைத் தடவிக்கொடுத்ததும் 'ஓலை வெடி போல்' வாலை மளமளவென்று ஆட்டிக்கொண்டு கொஞ்ச ஆரம்பித்தது. சிறுவன் அடிக்கடி அதற்கு பிஸ்கோத்து போட்டு வந்த காரணத்துக்காக அவனது உயிரையே காப்பாற்றிய நாய்க்கு என்ன தான் செய்யத் தோன்றுது?

* * * *

அஜீர்ணமா? காகிதத்தை தின்று!

'அஜீர்ணமாயிருந்தால் இஞ்சி சொரஸம் சாப்பிடு' என்று வைத்தியன் சொல்லுவான். இப்போது புதிய வைத்தியம் ஒன்று கிளம்பியிருக்கிறது! "வயிற்றில் கோளாறு? அல்லது இரைச்சலா?" சரி சாயங்காலம் வரும் பத்திரிகைகளில் ஏதாவது ஒன்றைத் தின்று என்று சொன்னால் அவ் வைத்தியனுக்கு மூளை கோளாறு என்று தான் சொல்லத் தோன்றும். ஆனால் அம்மாதிரி முடிவு கட்டுவது பிசகு என்பதற்கு ஓர் உதாரணம் கிடைத்திருக்கிறது.

கென்னிங்டன் என்ற விடத்தைச் சேர்ந்த மிஸ்டர் எப். ரிக்கார்டு என்பவர் ஒரு தினசரி பத்திரிகையில் இரண்டு பிரதிகள் வாங்குவாராம். ஒன்று தனக்குப் படிப்பதற்கு; மற்றொன்று மனைவி சாப்பிடுவதற்கு. அஜீர்ணமாயிருந்தால் அதை நிவர்த்திப்பதற்கும் மேனிக்கு அழகு ஊட்டவும் பேப்பரைத் தின்பதால் அனுகூலமிருப்பதாக அவர் மனைவி அனுபவத்தில் உணர்ந்திருக்கிறாராம்!

* * * *

எலி பிடிக்கப்போய் பூனை சிக்கியது!

வீட்டில் எலிகள் தொல்லை தாங்க முடியவில்லை. அவை படுத்திய பாடு கொஞ்சநஞ்சமல்ல. இதை ஒழிக்க ஒரு மேனாட்டுக்காரர் ஒரு பூனையையும் எலிப்பொறியையும் வாங்கினார். எலிப்பொறியை, தின்பண்டத்தை உள்ளே வைத்து திறந்து வைத்து விட்டுப் படுத்துக் கொண்டார். ராத்திரி மணி 12. படார்! என்று எலிப் பொறி மூடிக்கொண்டது. பொறியில் எலி விழுந்துவிட்டது அறிந்து துரை சந்தோஷமுற்றார். மறுநாட்காலை எலிப்பொறியில் பூனை "மியா, மியா" வென்று கத்திற்று!

* * * *

ஜன்னலுக்கு ரப்பர் கதவுகள்!

"அடே விசு உள்ளே ஏண்டா பந்தடித்துப் பிராணனை வாங்கறே! அந்த எழவை வாசல்லெ வெச்சிண்டு தொலையப்படாதோ! ஜன்னக் கண்ணாடிலே பட்டு ஒடைஞ்சு பேடுண்டா?" என்று உங்க வீட்டுப் பாட்டி ஸதா ஓலமிடுவதைக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். இனி மேல் உங்களுக்கு இந்த கவலை கிடையாது. எங்கே வேண்டுமானாலும் பந்தடிக்கலாம்!

இப்போது அமெரிக்காவில் செயற்கை ரப்பர் உற்பத்தி செய்கிறார்களல்லவா? அதில் ஓரளவு "க்ளோரைன்" என்ற சரக்கைச் சேர்த்து கண்ணாடிக் கதவுகளுக்குப் பதிலாக ரப்பர் கதவுகள் செய்கிறார்களாம்! இந்த ரப்பர், கண்ணாடி போலவே இருக்குமாம். உள்ளேயிருந்து வெளியே பார்க்கலாம். வெளியேயிருந்து உள்ளேயும் நோக்கலாம். ரப்பரை மாத்திரம் தான் இம்மாதிரி கண்ணாடி ஸ்வரூபத்தில் தயாரிக்க முடியும் என்று நினைக்க வேண்டாம். கற்களையே கண்ணாடியாகச் செய்து காட்ட முடியுமாம். டாக்டர் ஜேம்ஸ் பிமிஸ்டர் என்பவரும் மிஸ்டர் எட்வர்டு பாட்லி என்பவரும் கற்களையே கண்ணாடி மாதிரி உருப்படுத்திக் காட்டியிருக்கிறார்கள். மிஸ்டர் பாட்லி பாறைகளை மேற்சொன்ன மாதிரி தயார் படுத்தி தீப்பற்றாமல் தடுக்கக்கூடிய தட்டியாகச் செய்து வைத்தாராம்!

* * * *

4,248 குழந்தைகளை ஈன்ற தாய்!

இந்தத் தலைப்பைப் படிக்கும் போதே "இது என்னடா சுத்தப் புரளி" என்று தான் மனதில் தோன்றும். ஆனால் இது நிஜந்தானும். இதுபோன்ற விசித்திரங்களெல்லாம் என்னவோ அமெரிக்காவிலதான் நடக்கின்றன! அவற்றில் இதுவுமொன்று!

டாக்டர் லாரட்டா க்ரெஸ் என்பவர் வாஷிங்டனைச் சேர்ந்தவர். இவருக்கு மொத்தம் 4,248 குழந்தைகள் பிறந்தனவாம். இதனை குழந்தைகளும் 40 வருஷத்துக்குள் பிறந்தனவெனப்படுகிறது. ஒன்றுகூட சாகவில்லையாம்! தமக்கு கல்யாணமாகி 50 வருஷங்கள் பூர்த்தியாவதைக் கொண்டாடத் தாம் பெற்றெடுத்த குழந்தைகளுக்கு டாக்டர் க்ரெஸ் அழைப்பு அனுப்பியிருந்தார். அழைப்பை ஏற்று 600 குழந்தைகள் வைபவத்துக்கு வந்திருந்தனர். இவர் பெற்ற குழந்தைகளில் 49 இரட்டையாகப் பிறந்தவை. 4 முறை மும்மூன்று குழந்தைகள் பிறந்தனவாம்!

* * * *

தீ விபத்துபற்றி முன் எச்சரிக்கை

ஒரு மைலுக்கப்பால் தீப்பிடித்துக்கொண்டது என்று வைத்துக் கொள்வோம். தீ கொஞ்சம் பரவ ஆரம்பித்தவுடனேயே அதைப்பற்றி முன் எச்சரிக்கை செய்ய ஓர் இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அபாயமான ஸ்தலங்களில் தீப் பற்றினால் இவ்வியந்திர உதவி கொண்டு தீயிருக்கும் இடத்தை அடைந்து உடனே அதை அணைக்கலாம். மாஸ்கோவிலுள்ள ஒரு விக்ஞானி இந்த அரிய சாதனத்தைக் கண்டு பிடித்திருக்கிறார். இது ஒரு சிறிய கை விளக்கு மாதிரி இருக்கிறதாம். விளக்கின் 'வேடு' போல், "போட்டோ எலக்ட்ரிக் ஸெல்" ஒன்று இத்துடன் பொருத்தப்பட்டிருக்கிறது. இவ் இயந்திரமுள்ள பெட்டியில் 3 எச்சரிக்கைக் கருவிகள் அமைந்திருக்கும். ஒரு மணியும் அத்துடனிருக்கும். முதலில் சொன்ன ஸெல்லுக்கும் மேற்படி 3 கருவிகளுக்கும் சம்பந்தமிருக்கும்படி பிணைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தூரத்தில் ஏதாவது தீப்பொறி பறந்தால் உடனே இந்த யந்திரத்திலுள்ள மணி ஒலிக்க ஆரம்பிக்கும். இதைக் கொண்டு தீயிருக்கும் இடத்தை போய் பார்த்துச் சேதத்தைத் தவிர்க்கலாம். இதைக் கையிலேயே கொண்டு போக முடியுமாம். கூடிய சீக்கிரம் பெருவாரியாக இக் கருவிகளை உற்பத்தி செய்யத் திட்டம் போடப்பட்டிருக்கிறது.

★

'மரண கிரணத்தை' கண்டுபிடித்தவர் மறைவு

எதிரி விமானங்களைக் கீழே இறங்கும்படி செய்யவல்லதும், மரணத்தை உண்டாக்கக்கூடியதுமான ஒரு 'கிரணத்தை'க் கண்டு பிடித்தவர் நிகோலா டெஸ்லா என்பவர். அவர் இந்த புதிய கிரணத்தை 1934-ம் ஆண்டில் கண்டுபிடித்தார். இவருக்கு வயது 86. ரேடியோ தந்தியைக் கண்டுபிடிக்க வழி காட்டியவரும் இவர்தான். இத்தகைய 700 அற்புதங்களை இவர் கண்டு பிடித்திருக்கிறாராம். சென்றவாரத்தில் தான் நியூயார்க்கில் காலமானார்.

அமெரிக்க ஜெனரல் ஸ்டில்வெல்லும் சீன ஜெனரல் லோ சோயிங் என்பவரும் ராணுவ நடவடிக்கைகள் குறித்துப் படத்துடன் பரிசீலனை செய்கிறார்கள்.

சிறு கதை

சோதனை

★

"பீனு"

"பீனு" பாரதியாரின் பேரக் குழந்தை. ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதியின் குழந்தை. 'மித்திரன்' வாரப்பதிப்புக்காக அக் குழந்தை எழுதிய கட்டுரையை கீழே வெளியிடுகிறோம்.

"ஏண்டி ஜயா ரயிலுக்கு வெகு நாழிகை ஆய் விட்டது. சீக்கிரம் கதவைப் பூட்டு" என்று கையில் ஒரு சிறு தோல் பெட்டியை எடுத்துக்கொண்டாள் பத்மா. பின்பு இருவரும் ரயில்வே ஸ்டேஷனுக்கு வேகமாகப் போய்ச் சேர்ந்தார்கள். எக்மோரில் கூட்டத்திற்கு கேட்கவா வேண்டும்! அம்மம்மா! அசாத்திய கூட்டம். வழி அனுப்ப வந்தவர்கள் ஏராளமாக இருந்தார்கள். ரயில் புறப்பட இன்னும் பத்தே நிமிஷங்கள் தான் இருந்தது. கூட்டத்திற்குள் இடித்துத் தள்ளிக்கொண்டு ஜயா நுழைந்தாள். துரிதமாக இரண்டு டிக்கட்டுகளையும் பெற்றுக்கொண்டு பத்மாவையும் அழைத்துக்கொண்டு ரயிலில் வந்து ஏறினாள். அப்பாடா! ஒரு தினுசாக வந்து சேர்ந்தோம் என்று காலியாய் இருந்த ஒரு பெஞ்சில் உட்கார்ந்தாள் பத்மா. ஜயாவும் பத்மாவின் அருகில் அமர்ந்தாள். ஸ்டேஷனில் மணி அடித்ததும் ரயில் உஸ்......என்று சப்தத்துடன் புறப்பட ஆரம்பித்தது. அப்போது ஒரு சாமியார் வெகு அவசரமாக ஓடி வந்து இவர்கள் இருந்த 'கம்பார்ட்மெண்டி'ல் ஏறிக் கொண்டார். அவர் மெலிந்த தேகம் உடையவராய் காணப்பட்டார். கழுத்தில் ருத்திராக்ஷமும், காஷாய வஸ்திரமும் அணிந்திருந்தார். அடர்ந்த தாடி. கையில் ஒரு பிக்ஷை ஓடும் இருந்தது. அவர் பார்ப்பதற்கு ரொம்பக் களைப்பாக இருப்பவர்போல் தோன்றிற்று. ஒவ்வொருவரிடத்திலும் "சாப்பிட்டு மூன்று நாள் ஆச்சு. ஏதாவது காசு கொடுங்களேன்" என்று அவர் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தார். பின்பு பத்மாவிடத்திற்கும் வந்தார். (இனி பத்மா யார் என்பதை அறிவோம்.)

பத்மா ஜயாவின் தாயார். ஜயா அவளுடைய ஒரே பெண். ஜயாவுக்குச் சுமார் இருபது வயது இருக்கும். அவளுடைய கண் அழகும், பின்னலழகும் வர்ணிக்க முடியாதவை. அவள் சென்னையில் ஒரு உபாத்தியாயினியாக இருந்தாள். பத்மாவிற்கு சுமார் முப்பத்தி ஏழு வயது இருக்கும். அவளைப்பார்த்தால் வாழ்க்கையில் ரொம்ப துன்பம் அடைந்தவள் போலத் தோன்றும். சோகம் நிறைந்த கண்கள். மிகவும் இரக்க சித்தமுள்ளவள். சாமியார் பத்மாவைப் பார்த்ததும் சட்டெனப் பிரமிப்பு அடைந்தார். தலை 'கிர்' என்று சுழன்றது. உடம்பெல்லாம் குபீர் என்று வியர்த்தது. தன்னைத் தானே கஷ்டப்பட்டு சமாளித்துக்கொண்டார்.

பத்மா ஜயாவைப் பார்த்து, "ஐயோ பாவம்! சாமியாருக்கு இரண்டு அணா இருந்தால் எடுத்துக் கொடு" என்றாள். பின்பு சாமியாரை நோக்கி, "நீங் எந்த ஊருக்குப் போகிறீர்" என்று விசாரித்தாள். அதற்கு சாமியார், "அம்மா நான் தென்காசிக்குச் செல்லுகிறேன்" என்றார். (சற்று நேரம் கழித்து) அம்மா நீங்கள் வெகு தொலையிலிருந்து வருகிறீர்களோ?" எந்த ஊருக்குப் போகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு ஜயா, "நாங்கள் சென்னையிலிருந்து தான் வருகிறோம். எங்கள் சொந்த ஊர் தென்காசி. நாங்களும் அங்குதான் செல்லுகிறோம்' என்றாள். உடனே தான் சந்தேகித்தது சரிதான என்று நினைப்பது போல் அவர் முகத்தில் ஓர் மாறுதல் காணப்பட்டது. பத்து வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவங்களெல்லாம் மனதில் தோன்றி வதைக்க ஆரம்பித்தன. இரவில் அந்த நிசப்தமான வேளையில் ரயில் ஓடிக்கொண்டிருக்கிற சப்தத்தை தவிர வேறு ஒன்றும் இல்லை. மறுநாள் ரயில் தென்காசியை வந்தடைந்தது. பத்மாவும் ஜயாவும் ரயிலை விட்டு கீழே இறங்கி ஒரு மாட்டு வண்டி பிடித்துக்கொண்டு அதில் ஏறிச் சென்றார்கள். சாமியார் அவர்கள் இருவரும் மறையும்வரை கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார். பின்பு தன் கால் வழி போனபடி நடந்து சென்றார்.

இரவு பதினொரு மணி இருக்கும். எங்கும் ஒரே நிசப்தம், ஒரே கும்பிருட்டாக இருந்தது. குளிர்ந்த காற்று 'சில்' என்று வீசிற்று. சிறு சிறு தூற்றல் போட ஆரம்பித்தது. ஜயா ரயிலில் வந்த களைப்பினால் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். பத்மாமட்டும் தன் கணவனை நினைத்து கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள். பத்து வருடத்திற்கு முன் கணேசன் ஒரு பெரிய கொலை வழக்கில் சம்பந்தப்பட்டதாக அவனைப் போலீஸார் கைது செய்து அந்தமான் தீவில் சிறை வைத்தார்கள். அவனுக்கு எட்டு வருடம் சிறை வாசம். ஆனால் கணேசன் தான் ஒரு நிரபராதி என்று கெஞ்சியும் அதைப் போலீசார் நம்பவில்லை. கணேசன் கைதியாகக் கொண்டு போகப்பட்டான். அதன் பிறகு ஐந்து வருடங்கள் ஓடி சென்றன. திடீரென ஒரு பிரபல துப்பறிபவரால் உண்மைக் கொலையாளி கண்டு பிடிக்கப்பட்டான். உடனே கணேசனை விடுதலை செய்வதற்காக சிறையில் போய் பார்த்தபொழுது கணேசனைக் காணவில்லை. கணேசன் சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டான் என்ற செய்தி எங்கும் பரவியது. கொஞ்ச நாள் வரையிலும் இதே பேச்சாக இருந்தது. பின்பு கணேசனைப்பற்றிய பேச்சு எல்லாம் அமுங்கியே போய்விட்டது. ஆனால் பத்மாவிற்கு மாத்திரம் தன் கணவன் அநியாயமாக சிறை வைக்கப்பட்டான். ஒரு வேளை இக்கெட்ட பெயர் ஏற்பட்டதினால் தற்கொலை செய்து கொண்டிருப்பானோ? என்றெல்லாம் நினைத்து நினைத்து உள்ளம் துடிப்பாள். இந்த சம்பவங்களெல்லாம் அவளுக்கு அன்று நடந்ததைப் போலவே தோன்றியது. அவன் சிறைக்குச் செல்லும் பொழுது தன் பெண் ஜயாவுக்குப் பத்து வயது. அப்பொழுது கணேசன் அவளைத் தூக்கியெடுத்து முத்தமிட்டுக் கொண்டு அழுத காட்சி அவள் மனதை விட்டு அகலவேயில்லை. இதையெல்லாம் நினைத்து பத்மா அழுது கொண்டிருக்கும்பொழுது வாசற் கதவை "தட தட" வென்று தட்டும் சப்தம் கேட்டது. உடனே கண்ணைத் துடைத்துக் கொண்டு ஒரு விளக்கை ஏற்றினாள்.

கையில் விளக்கை எடுத்துக் கொண்டுபோய்க் கதவைத் திறந்தாள். திறந்து சாமியாரைப்பார்த்ததும், "நீங்கள் யார்? இந்த ரா வேளையில் எதற்குக் கதவைத் தட்டினீர்கள்?" என்று கேட்டாள். உடனே சாமியார் கண்ணில் நீர் துளிக்க "கண்ணே! பத்மா! நான் யாரென்று உனக்குத் தெரியவில்லையா? என் குரலில் இருந்தாவது தெரியவில்லையா? நான் கணேசன்" என்று தன் சாமியார் வேஷத்தைக்கலைத்தான். பத்மாவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. பேசவும் முடியவில்லை. "பிரிந்தவர் கூடினால், பேசவும் வேண்டுமோ?" இருவரும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். பத்மா "என் குழந்தை ஜயா எங்கே? அவளைக் காணோமே! அவளுக்கு கல்யாணம் செய்து விட்டாயா? அவள் புக்ககத்தில் இருக்கிறாளா? என்று படபடப்புடன் கேட்டான். (சற்று நேரம் கழித்து கம்மிய குரலுடன்) உங்கள்—இருவரையும்... பார்த்து விட்டுத் தான்...... உயிரை விட வேண்டுமென்று சிறையிலிருந்து தப்பி ஓடினேன். இனிமேல் இந்த உலகில் உயிர் வாழ விரும்பேன் என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினான். அப்போது பத்மா "நாதா! நீங்கள் குற்றவாளி இல்லை என்று இப்பொழுது உலகம் அறியும். ஏனென்றால் உண்மைக் கொலை பாதகன் அகப்பட்டு விட்டான். கவலைப்படாதீர்கள். கடவுள் நமக்கு எப்பொழுதும் துன்பத்தைக் கொடுக்க மாட்டார்.' உங்களுக்கு தெய்வ பக்தி அதிகமாதலாலும், தெய்வ நம்பிக்கை உள்ளவராதலாலும் கடவுள் நம்மை சோதித்தார் என்றே நினைத்துக் கொள்வோம். இனிமேல் நமக்கு இன்பம் தான் தருவார்" என்றாள்.

இதற்குள் ஜயா பேச்சுக் குரல் கேட்டு விழித்துக் கொண்டாள். உடனே எழுந்திருந்து அம்மா இருக்கும் இடத்துக்கு வந்தாள். அங்கு பத்மா ஒரு புருஷனுடன் உட்கார்ந்து கண்ணீர் விட்டுக் கொண்டு பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

"அம்மா என்ன சமாசாரம்? யார் அது?" என்று வினவினாள். கணேசன் ஜயாவையே உற்று பார்த்துக் கொண்டிருந்தான். அவள் இப்பொழுது ஒரு அழகிய மங்கை பருவத்தினளாய் இருந்தாள்.

"ஜயா இவர் தான் உன் தகப்பனார்" என்றாள் பத்மா. உடனே ஜயா, "அப்பா என்று அவர் கரங்களை பற்றிக்கொண்டாள். மூவருக்கும் கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகியது.

"நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு அம்பிகையை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்."

மாசிலா மாலினி

★

"வனஜா"

நடேசய்யருக்கு மாலினி ஐந்தாவது பெண். முதல் நாலு பெண்களுக்கும் கஷ்டப்படாமல் கலியாணம் பண்ணி விட்டார். பிள்ளைகள் மூன்று பேரும் வேலையில் இருந்தார்கள். மாலினிக்கு மாத்திரம் நல்ல வரனே கிடைக்கவில்லை. நடேசய்யருக்கு வயது கிட்ட தட்ட அறுபது. தான் இருக்கும் பொழுது பெண்ணுக்கு கலியாணம் பண்ணிப்பார்த்து விட வேண்டுமென்று பெரிய கவலை அவருக்கு உண்டாய்விட்டது. கலியாண காலம் முடிய இன்னும் ஒருமாதம் தான் பாக்கி இருந்தது. ஜாதகம் பொருந்தி மனதுக்கும் பிடித்திருந்த இரண்டு வரன்கள் இருந்தன. முதல் வரத்திற்கு வயதுஐம்பது. இரண்டாம் கலியாணம் ஆனல் ஒரு லக்ஷத்திற்கு ஆஸ்தி இருந்தது. இரண்டாவது வரனுக்கு வயது குறைவுதான். பி. ஏ. யும் பாஸ் ஆய் இருந்தது. ஆனல் வேலையும் இல்லை, ஆஸ்தியும் கிடையாது. இது இரண்டையும் விட்டால் திரும்பி அடுத்த வருஷம்தான் வேறே வரன் பார்க்க வேண்டும். நடேசய்யருக்கு இப்படி காலம் கழிக்க இஷ்டமில்லை ஆகையால் பெண்ணைக் கூப்பிட்டு சமாசாரத்தைச் சொன்னர். பெண் ரொம்ப புத்திசாலியாகவும் அழகாயும் இருந்தாள். தகப்பனுடைய கவலையை உணர்ந்து "அப்பா எனக்கு பணம் வேண்டாம். படிப்பிருக்கும் பையனுக்கு கொடுத்து விடுங்கள். அதிருஷ்டம்போல் நடக்கட்டும்" என்று வெட்கத்தை விட்டு பளிச்சென்று சொல்லிவிட்டாள். அடுத்த முகூர்த்தத்தில் சௌ. மாலினிக்கும் சி. சேகரனுக்கும் ஆடம்பரமின்றி விவாகம் நடந்தது. பெண்ணுக்கு ஏற்றபடி மாப்பிள்ளை அழகாயும் நல்ல குணமுள்ளவனுகவும் இருந்தான். சேகரன், தான் ஊர் போய் வேலை தேடுவதாயும் கிடைத்தவுடன் தன் மனைவியை அழைத்துக்கொண்டு போவதாயும் சொன்னன். அதற்கு நடேசய்யர் "அப்பா, நீ வேலை தேடி அகப்பட்ட பிறகு குழந்தையை அழைத்துக்கொண்டு போ. அது வரையில் ஏதாவது பணம் வேண்டி இருந்தால் எழுது. நீ கலியாணத்தில் வரதக்ஷிணை என்ருவது சீராவது செய்யக்கூடாதென்று சொல்லிவிட்டதால் நான் ஒன்றும் செய்யவில்லை. ஆகையால் எந்த நிமிஷம் உனக்கு என்ன வேண்டி இருந்தாலும் எழுதி வாங்கிக்கொள்" என்று சொன்னர். சும்மா சேகரன் "ஆகட்டும்" என்று தலையை அசைத்தானே ஒழிய மனதில் அவனுக்கு ஒருவரிடமும் ஒரு காசாவது வாங்க இஷ்டமில்லை. என்ன கஷ்டம் வந்தாலும் தான் கஷ்டப்படுவானே ஒழிய ஒருவரை போய் கேட்கமாட்டான். மாலினியின் அதிர்ஷ்டத்தால் சேகரனுக்கு பம்பாயில் வேலை கிடைத்தது. "டிக்ஸன்" கம்பெனி பெரிய கம்பெனியானதால் எடுத்ததும் 100 ரூபாய் சம்பளம் கொடுக்க முடிந்தது. சேகரனின் நல்ல குணம் அந்த கம்பெனி மானேஜருக்கு கொஞ்ச நாளிலே தெரிந்து விட்டது. ஆகையால் நல்ல பெயர் வாங்கி விட்டான் சேகர் அவ்விடத்தில். வேலையான ஒரு மாதத்திற்கெல்லாம் மாலினியை அவளுடைய தகப்பனர் பம்பாயில் கொண்டு வந்து விட்டு விட்டார். சதிபதிகள் ரொம்பவும் அன்னியோன்யமாக சம்சாரம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். மாதங்களும் பிறந்தன. வேலைக்கு சேர்ந்து பத்து மாதம் முடியும் முன் சேகரனின் சம்பளம் ரூ 200 ஆய்விட்டது. அதற்கு ஏற்றபடி வீட்டில் ஆளும் செலவும் அதிகமாய் விட்டது. மாலினியின் சந்தோஷத்திற்கு அளவேயில்லை. பிரியமான கணவரும் சுகமாய் வீடும் பணமும் ஒரு நல்ல குணப் பெண்ணிடம்சேர்ந்தால் திருப்தி அடையாமல் இருப்பாளா? ஆகையால் சேகரனும் மாலினியும் தங்கு தடையின்றி ஓடும் நதியைப் போல் கவலையற்று சந்தோஷமாக இருந்தார்கள்.

2

இரண்டு வருஷங்கள் இரண்டு நிமிஷம் போல் ஓடி விட்டன. சீமையில் ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் யுத்தம் ஆரம்பமாய் விட்டது. இந்தியாவிலிருந்த ஜெர்மன் கம்பெனிகளெல்லாம் மூடி விட்டார்கள். நம் சேகரன் இருந்த "டிக்ஸன்" கம்பெனியும் ஜெர்மன் கம்பெனியானதால் அதையும் மூடி விட்டார்கள். சேகருக்கு அந்த சமாசாரம் தெரிந்தவுடன் பெரிய இடி விழுந்த மாதிரி இருந்தது. வீட்டிற்குப்போய் மாலினியிடம் எப்படி இந்த சமாசாரத்தை சொல்வது? என்று கவலைப் பட்டுக்கொண்டே வீடு வந்து சேர்ந்தான். கணவனின் வாடிய முகத்தைக் கண்ட மாலினி "ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்? உடம்பு சரியில்லையா" என்று அன்பாக கேட்டாள். "இல்லை, உடம்பு சரியாய் தான் இருக்கிறது. வேலை தான் போய் விட்டது" என்று துக்கம் தொண்டையை அடைக்க சேகரன் பதிலளித்தான். சட்டென்று தன் கணவனின் துயரத்தை உணர்ந்த மாலினி "இந்த வேலை இல்லாவிட்டால் வேறே வேலை தானே கிடைக்கிறது. நம்மை போல் எவ்வளவு பேர் கஷ்டப்படுகிருர்களோ?" என்று அவனைச் சமாதானம் பண்ணினள். "மாலினி, நான் ஒருவனுய் இருந்தால் எப்படியோ கஷ்டப்பட்டு வேலை அகப்படும் வரையில் காலம் தள்ளுவேன். உன்னையும் துன்ப படுத்த வேண்டுமே மாலினி? இது நினைத்தவுடன் வேலை அகப்படும் காலமல்ல. ஆகையால் நீ வேண்டுமானல் உங்க அப்பா வீட்டிற்குப் போய் சுகமாய் இரு. வேலை கிடைத்தவுடன் வரலாம்" என்று சேகரன் சொன்னன். அதற்கு மாலினி நீங்கள் வேலையில்லாமல் கஷ்டப்படும் பொழுது நான் ஊருக்குப் போகவே முடியாது. ஆறுமாதத்திற்குள் வேலை கிடைக்காமல் போய்விடுமா? அப்படித்தான் கிடைக்காவிட்டால் அப்பாவிற்கு எழுதினல் தானே அனுப்புகிருர் என்ருள். "அந்த வார்த்தை மாத்திரம் என்னிடம் சொல்லாதே. பெண்டாட்டியைக்காப்பாற்ற முடியாமல் மாமனுரைக் கேட்பதா? நீ அந்த வேலையைச் செய்தால் எனக்கும் உனக்கும் மனஸ்தாபம் வரும் என்று கோபமாக சொன்னன் சேகரன். கணவனுடைய நோக்கத்தை உணர்ந்த மாலினி "சரி நான் ஊருக்குப் போவதுமில்லை பணமும் வாங்கிக்கொள்வதில்லை." என்று சொல்லி பேச்சை மாற்றிக் கணவனைச் சந்தோஷப்படுத்தினள்.

3

சேகரனுக்கு வேலை போய் ஆறு மாதங்கள் ஆய்விட்டது. மாலினி கணவனை தொந்திரவு செய்யக்கூடாதென்று வீட்டில் இருந்த ஆட்களை அனுப்பி தானே வேலை செய்ய ஆரம்பித்தாள். எவ்வளவு நாள் தான் மாத வரும்படி இல்லாமல் சம்சாரத்தை நடத்த முடியும்? சேர்த்து வைத்திருந்த தொகையும் செலவழிந்து விட்டது. வீட்டில் இருந்த பழைய பேபர் சோக்கள் முதல் விற்று மாலினி குடித்தனம் பண்ணினள். சேகரும் காலை ஆறு மணியிலிருந்து மாலை ஏழுமணி வரையில் வேலைக்காக அலைவான். சில நாள் ஏதாவது கம்பெனியில் கணக்கு எழுதி ஒன்று இரண்டு ரூபாய்கள் சம்பாதிப்பான். இப்படி இருக்கும் பொழுது சேகரன் ஒருநாள் ரொம்ப வெறுப்புடன் வேலைக்காக அலையும் பொழுது வழியில் தபால்காரன் மாலினிக்கு வந்திருந்த ஒரு கடிதத்தைக் கொடுத்தான். சாதாரணமாக அவளுக்கு வரும் கடிதங்களை சேகரனும் படிப்பது வழக்கமாதலால் அதை உடைத்துப் பார்த்தான். உள்ளே ஒரு புகைப்படமும் ஐம்பது ரூபாய் நோட்டும் சின்ன கடிதத்துண்டும் இருந்தன. ஆவலுடன் புகைப் படத்தைப் பார்க்க ஒரு இளைஞனின் படமாக இருந்தது. அதன் அடியில் "சௌ. மாலினிக்கு அன்புள்ள சுந்தரம் அனுப்பியது" என்று தெளிவாக எழுதி இருந்தது. கடிதத்தில் "என்னை நீ அடையாளம் தெரிந்து கொள்வாயோ? அல்லது மறந்து விட்டாயோ? என்று பரீக்ஷிக்க இந்த புகை படத்தை அனுப்பி இருக்கிறேன். விவரம் அடுத்த கடிதத்தில். பணம் அனுப்பியிருக்கிறேன். எதற்கென்று உனக்கே தெரியலாம், இப்படிக்கு சுந்தரம்" என்று என்று எழுதி இருந்தது. சேகருக்கு ஒன்றுமே புரியவில்லை.

யார்? சுந்தரம் "நமக்குத் தெரிந்தவரையில் யாரும் மாலினிக்கு அந்த பெயருடைய சகோதரனவது, தூர பந்துக்களாவது கிடையாதே! ஒரு வேளை யாராவது பழைய நண்பனுடன் கடிதப்போக்கு வைத்துக் கொண்டிருக்கிருளா? அப்படியானல் இது வரை நம்மிடம் சொல்லாத காரணம் என்ன? ஒரு வேளை இப்படி நமக்குத் தெரியாமலே அந்த சுந்தரத்தைக் கேட்டுக் கேட்டு பணம் வாங்கி செலவு செய்கிருளா? அப்படியானல் எனக்கும் அவளுக்கும் இனிமேல் ஒத்துவராது" என்று யோசித்துக் கொண்டே வீடு வந்து சேர்ந்தான்.

மாலினி இருந்த அரிசியைக் கொண்டு சமைத்திருந்தாள். கணவனுடைய வாடியவதனத்தைப் பார்த்து அவளுக்கு ரொம்ப வருத்தமாய் விட்டது. பரிவுடன் படைத்தாள். சேகரன் சாப்பிடும் பொழுது "நான் வீட்டிற்கு பணம் கொண்டு வந்தே பத்து நாள் ஆய்விட்டதே! எப்படி நீ குடித்தனம் செய்கிருய்?" என்று கிண்டலாகக்கேட்டான். முதலில் அவனுடைய நோக்கத்தை கவனியாமல் மாலினி ஏதோ, என்னிடம் கொஞ்சம் பணம் பாக்கி இருந்தது. அதை வைத்துக் கொண்டுதான் காலம் தள்ளுகிறேன். ஏன்?" என்ருள்.

'அப்படியா, யாராவது, நண்பர்களுக்கு எழுதி பணம் வருவழித்துக் கொள்ளுகிருயோ என்று விசாரித்தேன்" என்று ஒருவித வெறுப்புடன் சேகரன் பதிலளித்தான். மாலினிக்கு ஒன்றும் புரிய வில்லை. ஏதோ சேகரன் கோபத்துடன் இருப்பதாகத் தெரிந்ததே ஒழிய வேறென்றும் தோன்றவில்லை. இந்த வேளையில் பேசினல் கோபம் ஜாஸ்தி ஆய்விடும் என்று நினைத்து சமையல் அறைக்கு சென்று விட்டாள். சேகருக்கு சந்தேகம் முற்றிவிட்டது. "ஓஹோ ஏதோ இவள் திருட்டுத்தனமாய் பணம் வாங்கிக்கொள்கிருள். யாரிடமென்று நம்மிடம் சொல்ல இஷ்டமில்லாமல் ஒளிந்துக்கொள்கிருள்" என்று தீர்மானித்துவிட்டான். முதலில் சொன்னமாதிரி சேகரன் நல்ல சுபாவமுள்ளவனுனுலும் தன்னிடம், அதுவும் தன் மனைவி ஏதோ விஷயத்தை மறைக்கிருள் என்று தெரிந்ததால் ரொம்ப கோபமும் எரிச்சலும் உண்டாவிட்டது. தனக்கு வேலை போய் விட்டதினல் தானே அவள் இப்படி எல்லாம் தன்னைக் கேட்காமல் கண்டவனுக்கெல்லாம் கடிதம் எழுதி பணம் பெற்றுக் கொள்கிருள். ஒரு வேளை சுந்தரம் இவளுடைய பழைய நண்பனே ஏன் காதலனுக இருக்கக் கூடாது! என்ன பேதமை! நாம் வெளுத்ததெல்லாம் பால் என்று நினைத்து இவள் பாசாங்கு செய்வதை நிஜமென்று நம்பி விட்டோமே? நேரில் இந்த புகைப் படத்தில் இருப்பவன் யார் என்று கேட்டு விடலாமா என்று யோசித்தான். உடனே அப்படி இருந்தால் தனக்கு அவன் யாரென்று தெரியாது என்று ஒரே அடியாய் புளுகி விட்டாலும் விடுவாள். ஆகையால் இன்னும் ஏதாவது கடிதங்கள் வந்தால் பார்த்து விட்டு விசாரிப்போம் என்று நிச்சயித்து சும்மா இருந்து விட்டான்.

4

மாலினியின் பாடு பெரிய திண்டாட்டமாய் விட்டது. சேகரன் வீட்டிற்கு வேளா வேளைக்குச் சாப்பிட வருவதை நிறுத்தி விட்டான், வரும்பொழுதே "சிடுசிடு"வென்று பேசுவான். மாலினி இப்படி தன் புருஷன் மாறுதலடைவான் என்று நினைத்தவளல்ல. ஆகையால் இந்த மாறுதல் ரொம்ப கஷ்டப்படுத்தியது. பாதி நாள் சரியாய் சாப்பிடவே மாட்டாள். கணவனுக்காக எவ்வளவோ கஷ்டப்பட்டாலும் அதை அறியாமல், தன்னுடன் பேசக்கூடப்பிடிக்காமல் தன் கணவன் இப்படி கோபம் கொள்ள காரணம் என்னவென்று அவளுக்குத் தெரியவில்லை. இரண்டு தரம் அவனைக் கேட்டதற்கு 'உன் வேலையைக் கவனி' என்று பதலளித்து பழய மாதிரியே இருந்தான். இப்படியே பத்து நாள்கள் சென்றன. மாலினி அந்த பத்து நாள்களும் தூங்கவும் இல்லை. சாப்பிடவும் இல்லை. என்ன கஷ்டம் வந்தாலும் கணவனின் நம்பிக்கையைப் பெற்றுல் போதும் என்று ஆசைப்பட்டவளுக்கு அதே போய்விட்டால் வேறு என்ன இருக்கிறது! ஊருக்கு இந்த விஷயங்களை எழுதவும் அவளுக்கு பிடிக்கவில்லை. ஸ்வாமி படத்தைப் பார்த்து தன் துக்கத்தைச் சொல்லி அழுவாள், புலம்புவாள் அவ்வளவு தான்.

ஒரு நாள் மாலினி பட்டினியாய் ஸ்வாமி படத்தின் முன் படுத்து தன் கஷ்டத்தைச் சொல்லி அழுதுக்கொண்டிருக்கும்பொழுது வாசற் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டு கண்ணை துடைத்துக்கொண்டு எழுந்திருக்கையில் சேகரனின் குரல் தன்னை பழைய மாதிரி கூப்பிடுவதாக அவளுக்குதோன்றிற்று, ஏதோ கனவென்று நினைத்துக்கொண்டே கதவைத் திறந்தான். சேகரன் உள்ளே நுழையும் முன் மாலினி மூர்ச்சையாய் விழுந்துவிட்டாள்.

5

கண் திறந்து பார்த்தாள் மாலினி. தன் படுக்கையில் படுத்திருப்பதையும் தன் புருஷன் தனக்கு தீர்த்தம் கொடுத்து உபசரிப்பதையும் உணர்ந்தாள். தான் கதவை திறக்க போனதும் தலை சுற்றியதும் நினைவு வந்தது. சேகரன் மாலினியின் கைகளை அன்பாகப் பிடித்துக்கொண்டு மாலினி, என்னை மன்னிப்பாயா? உன்போன்ற உத்தமியை சந்தேகித்தேனே! பத்து நாள் முன் ஒரு புகை படமும் ஐம்பது ரூபாயும் போட்ட கடிதம் உனக்கு வந்தது. அதில் சுந்தரம் என்று எழுதி இருந்ததாகவும், நீ யாரிடமாவது பணம் வாங்கிக்கொள்கிருயா? என்று நான் கேட்டதற்கு பதிலளிக்காததாகவும் உன் மேல் சந்தேகம் உண்டாகி விட்டது. இன்று தபாலில் இந்த கடிதம் வந்தது. அதை பார்த்ததில், உங்கக்கா பெண் சுந்தரி, பள்ளிகூடத்தில் நாடகமாடியதாகவும், அதில் தான் போட்டிருந்த புருஷ வேஷ புகைப் படத்தை தமாஷ் பண்ண அனுப்பியதாயும் உன் கலியாணத்திற்கு உங்கக்கா வராததினல் புடவை வாங்கவில்லையென்று அதற்குப் பதில் ஐம்பது ரூபாய்களை அனுப்பினர்கள் என்றும், வேணும் என்று சுந்தரி சுந்தரம் என்று பெயர் போட்டு விவரமில்லாமல் கடிதம் எழுதியதாகவும் உங்கக்கா எழுதி இருக்கிருள். அதைப் பார்த்தவுடன் எனக்கு ரொம்ப வெட்கமாய் விட்டது. அதற்குள் என் சிநேகிதன் வந்து "இந்தியா கம்பெனி" யில் ரூ 100 சம்பளத்தில் வேலை இருப்பதாகவும் போய் பார்த்தால் கிடைக்குமென்று சொன்னன். உடனே அங்கே போய் விசாரித்ததில் வேலையும் கிடைத்து விட்டது. நம்முடைய க்ரஹசார காலம் முடிந்து விட்டது மாலினி" என்று சொல்லி முடித்தான். மாலினி கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

அலூஷியின் தீவில் பிடிபட்ட ஜப்பானியர்

கண்ணுமூச்சி விளையாட்டல்ல! :— அலூஷியின் தீவில் இரண்டு ஜப்பானியர்கள் கடற்படை யுத்தத்தில் சிறைபிடிக்கப்பட்டார்கள். அவர்களது கண்களைக் கட்டி அலாஸ்கா கடற்கரைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது எடுத்த படம்.

பியான்ஸி பிரிண்ட் புடவை

நைஸான துணி. அழகிய கண்ணைக் கவரும் பிரிண்ட். உடலில் புட்டா அல்லது ஜங்களா போட்டது. படித்த மாணவிகள் இதைப் பெரிதும் விரும்புகிருர்கள். நவீன ரகம்.

12 முழம் புடவை 1க்கு ரூ. 9-0-0
16 முழம் ,, ,, ரூ. 12-0-0

முத்தையா ஸ்டோர்ஸ்,
மவுண்ட் ரோட்—மதராஸ்.

பல வருஷங்கள்
யௌவன தோற்றமும் உணர்ச்சியும்
ஏன் பெறலாகாது?

தினசரி இரவு தவருமல் இரண்டு பைல் பீன்ஸ் மாத்திரைகள் உட்கொண்டு வந்தால், பல வருஷங்கள் யௌவனதோற்றமும், சுறுசுறுப்பும், சந்தோஷமும் பெறலாம். பைல் பீன்ஸ் சுத்த தாவரசத்து. இவை சரீரத்தை சீர்படுத்தி, ரத்தத்தை சுத்தம் செய்து, தினசரி உணவு அசுத்தத்தை வெளிப்படுத்தும். எனவே நீங்கள் ஆரோக்யமாகவும், யௌவனமாகவும், வசீகரமான மெலிவு பெற்றும் விளங்குவீர்கள்.

எல்லாமருந்து வியாபாரிகளும் பைல்-பீன்ஸ் பாட்டில் ரூ. 1வீதம் விற்கின்றனர்

BILE BEANS

பைலபீனஸ ஆரோகயமாகவும், யௌவனமாகவும் வைத்திருக்கும்

தெய்வ சங்கற்பம்
(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விளங்காத தாத்தா விழித்துக் கொண்டு நின்ருர்.

"ஐயோ! நீ குண்டு தாத்தாவா? என்ன தவறு" என்று அலறிச் சாய்ந்து. கண்களை மூடிஞன். அவ்வளவு தான். மூடிய கண்கள் பிறகு திறக்கவேயில்லை.

கமலா கதறிஞள். பிரயோ ஜனம்?

தந்தியைக் கண்டதும் சௌந்தரம் பறந்து கொண்டு வந்து சேர்ந்தான். அதற்குள் தான் சிவசைலத்தின் ஆத்மா பிரிந்து விட்டதே! கமலாவுக்கும் குண்டுத் தாத்தாவுக்கும் கல்யாணம் ஆயி விட்டது.

அவள் அழுது கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

8

"அண்ணு! கடைசியாக இது வா உன் கட்டளை? "உன் காலத்தைக் கன்னியாகவே கழி, தவக் கோலம் கொள். அதுவும் நல்லதுதான். அதன்படியே நடப்பேன். நீ இட்ட கட்டளையை மீறமாட்டேன். இது சத்தியம்" என்று நினைத்துக் கொண்டு இருந்தாள்.

புடவை முன்தாணையால் கண்ணைத் துடைத்துக்கொண்டு அங்கு தோன்றிய சௌந்தரத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

"கமலா! என்ன உனக்குக் கல்யாணமாகி விட்டதே என்ரு யோசிக்கிருய்? இது என்ன பேதமை! ஆயிரம் செலவழித்துக் கல்யாணம் செய்து மல்லவா விவாக ரத்து செய்து விடப்படுகிறது? இதென்ன பிரமாதம்? இன்றே விவாக ரத்து செய்து விடு. இனிமேல் வருத்தப்பட்டும் பயன் இல்லை. வாழ்க்கையில் நீ சங்கடப்பட வேண்டாம், என்னேடு வந்து விடு" என்ருன்.

அவள் ஒரு சிரிப்புச் சிரித்தாள். அதில் சோகம் கலந்த ஏளனம்!

"விவாகத்திற்காக நான் பயப்படவில்லை. ஆனுல் அண்ணன் இட்ட கட்டளையை மீறலாமா?" என்று நிதானமாகக் கேட்டாள்

சௌந்தரம் இந்த பதிலை எதிர்பார்க்கவேயில்லை.

"மணி மேகலையைப் போல் கன்னியாக இருந்து காலம் கழி" இதுதான் என் அண்ணன் கட்டளை.

"கமலா! இதெல்லாம் வாழ்க்கையில் பார்த்துக்கட்டுமா?" என்ருன்.

சௌந்தரத்தின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும், பெண்மையின் அபலைக் கண்களில் ஒரு வீராவேசமே தோன்றியது.

"சௌந்தரம்! உங்களுக்கு நமஸ்காரம். தயவு செய்து இன்னெரு தடவை அப்படிச்சொல்ல வேண்டாம். அண்ணன் போய் விட்டான். அவன் கட்டளையை விட வாழ்வு பெரிதா! நீங்கள் அவ்விதம் சொல்லலாம். ஆனுல் இந்த கமலா அவ்விதம் துணிய மாட்டாள்!"

சௌந்தரம் திடுக்கிட்டான். அந்த தொனி அவனைத் துணுக்குறச் செய்தது.

"கமலா! நான் போகட்டுமா?" என்ருன்.

"உங்களுடைய அன்புக்கு நமஸ்காரம். கடவுள் இருக்கிருர். என்னைக் காப்பாற்றுவார். இதுதான் சிறுவயதில் எனக்கு என் தகப்பனுர் போதித்த வேத மொழி."

சௌந்திரத்தின் கால்கள் இடறின. அவன் தீயில் நடப்பதுபோல் நடந்து சென்ருன்.

9

வீடு சென்ற சௌந்தரத்தின் மனமே மாறிவிட்டது. தன் அறையில் நுழைந்ததும் அவன் கண்களில் ஒரு ஸ்டாண்டில் மாட்டியிருந்த ஹாக்கி ஸ்டிக் கண்ணில் பட்டது. அதை எடுத்தான்; பற்கள் 'நற நற'வென்று சப்தம் செய்தன. "உன்ஞல் தானே ஒரு பெண் வாழ்க்கை பாழ்பட்டது; ஒருவன் மாண்டான். இனி இன்று முதல் உன்னை நான் தொடமாட்டேன். தொட்டால் இன்னும் எத்தனை குடும்பங்கள் பாழ்படுமோ? என்று சொல்லி அந்தக் குச்சியை சுக்கல் நூருக ஒடித்து வீசி எறிந்தான்.

அன்றுமுதல் இன்றுவரை அவன் ஹாக்கி விளையாடுவதையே நிறுத்திவிட்டான்.

அவனுக்கு வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. ஆகையால் மனதிற்குச் சாந்தியளிக்கும் பொருட்டு நதி அமராவதியை நோக்கிச் சென்று அந்தக்கரையில் மெதுவாக நடந்து கொண்டிருந்தான்.

நல்ல நிலா; எங்கும் ஒரே வெண்மையான மணல் திரள். அதன் நடுவில் கருநிறமுள்ள அமராவதி நிலவொளியில் மயங்கியவன்போல் மெதுவாய்ச் சென்று கொண்டிருந்தாள். அப்போது ஒரு கீர்த்தனையை யாரோ மிகவும் உருக்கமாகப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

பாடுவது யாராய் இருக்கலாம்? என்பதைப் பார்க்க சப்தம் வந்த திக்கை நோக்கிச்சென்ருன்.

அங்கிருந்த பிள்ளையார் கோவில் எதிரிலிருந்த ஒரு மணல் மேட்டில் ஒரு பெண் உட்கார்ந்து பாடிக்கொண்டிருந்தாள். வெண் மணல். வெண்ணிலா வெண்பட்டுடுத்திக் கொண்டு ஒரு பெண் இருப்பதைக் கண்டவுடன், "இவள் யார் மோகினியா" என்று தோன்றியது சௌந்தரத்திற்கு.

நெருங்கிப் பார்த்தபோது கமலாவாய் இருந்தது. "இவள் ஒரு சாதாரணப் பெண்ணல்ல. தெய்வீகப் பெண் தான். ஒரு தெய்வீக மோகினிதான் அவள்" என்று தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டான் என்று சொல்லி வந்தவர் கதையை முடித்தார். "என்ன ஸார் எப்படியிருக்கிறது கதை! என்று கேட்டார்.

எனக்கு ஒன்றும் பதில் பேச முடியவில்லை. "ஏன் ஸார்! இந்தக் காலத்தில் கூடவா தன் அண்ணனிடம் கொண்ட அன்பிற்காக தன் காதலையே தியாகம் செய்யும் அவ்வளவு நல்ல பெண் இருக்கிருள்?" என்று கேட்டேன்.

அதற்கவர் "ஏன் ஸார் இருக்கக் கூடாது? இக் காலத்திலும் நல்ல குணம் படைத்த பெண்கள் சில பேர் இருக்கலாம். அதில் இவள் ஒருத்தி" என்ருர். வாஸ்தவமென்று என் மனதில் பட்டது.



அவன் லைப்பாய் முறையை அநுஷ்டிப்பதால், "அழுக்கு அபாய"த்திலிருந்து காப்பாற்றப்படுகிருன்!

நீங்கள் பம்பரத்தைச் சுழற்றி, அது ஆடிக்கொண்டிருக்கும் போது அதைத் தரையிலிருந்து உங்களுடைய கைக்கு ஏற்றி வைத்துக்கொண்ட அந்த நாட்கள் உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? உங்களுடைய கைகள் எவ்வளவு அழுக்கடைந்து வந்தன என்பதும் உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?

இன்றைக்கும் அது போலத்தான் நடந்து வருகிறது—ஆனுல் நாம் இப்பொழுது அழுக்குப்படிந்த கைகளின் அபாயத்தை அறிந்திருக்கிருேம். தூசியும் அழுக்கும் கிருமிகளைக் கொண்டு செல்கின்றன வாகையால் நோயை உண்டாக்கவும், தொத்து வியாதியைப் பரவச் செய்யவும் கூடும் என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிருேம்.

ஆகவே நாம் இப்பொழுது நமது பையன்களுக்கு லைப்பாய் முறையைப் போதிப்போம். லைப்பாய் கிருமி நாசன ஸோப் என்பதையும், ஆரோக்யத்தைப் பாதுகாக்கக் கூடிய விசேஷத்தைப் பிரத்யேகமாய்க் கொண்டுள்ளதையும் இப்பொழுது நாம் அவர்களுக்குச் சொல்வோம். அடிக்கடி முறை தவருமல் லைப்பாயினுல் அவர்கள் சுத்தம் செய்து கொள்வதையும், அதனுல் அவர்கள் அழுக்கு-அபாயத்திலிருந்து காப்பாற்றப் படுவதையும் நாம் பார்ப்போம்.

ஒரு நல்ல ஸோப்பைக் காட்டிலும் சிறந்தது

லைப்பாய்

அது ஒரு நல்ல வழக்கம்

L. 32—169 TM.

LEVER BROTHERS (INDIA) LIMITED



பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

ஜோதிர்மண்டலம்

சித்ரபானுஸு தை

★ விசாகம்

இந்தப் பக்கத்திலுள்ள படம் சென்னையில் இராக்காலத்தில் முன்னிரவில் நமக்குத் தெரியும் நக்ஷத்திரக் கூட்டங்களைக் காட்டுகின்றது. எந்த திக்கை நாம் நோக்கி நிற்கிருேமோ, அத்திசையை அடிப்பாகமாக வரும்படி படத்தை திருப்பி வைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது நமக்கு எதிரில் அடிவானம் முதல், உச்சிவரையிலுள்ள கூட்டங்கள் படத்தில் அடிப்பாகம் முதல் நடுவரை காணப்படும். சென்னை தவிர மற்ற ஊர்களுக்கும் இப்படத்தை உபயோகிக்கலாம்.

கும்பக் கூட்டம்

இராசிக் கூட்டங்களில் பதிஞென்ருவது கும்பம். இம்மாதம் சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு மேல் வானில் இக்கூட்டத்தைக் காணலாம். இதற்கு வடக்கே ஆகாயப் புரவிக் கூட்டமும். கிழக்கே மீனமும், மேற்கே இராஜாளியும் இருக்கின்றன. மிகவும் உயர்ந்த அழகு பொருந்திய கூட்டமாயில்லாவிட்டாலும், இதில் சில பிரகாசமான நக்ஷத்திரங்கள் இருப்பதால், பழைய கால முதல் இதை ஜனங்கள் கவனித்து வந்தார்கள்.

பண்டைக் கால முதலிலிருந்து இக்கூட்டத்தை தண்ணீருடன் அநேகமாக எல்லா தேசத்தாரும் இணைத்து வந்தார்கள். இதற்கு காரணம், இக்கூட்டம் மாரிக்காலத்தின் அறிகுறியாயிருப்பதுதான். அரேபியர்கள் இதை ஒரு கழுதை உருவாகக் கருதினர். அக்கழுதை இரண்டு பானைகளில் தண்ணீர் தூக்கிச் செல்வதாக அவர்கள் கொள்கை. பாபிலோனியாவில் இக்கூட்டத்தை ஒரு மனிதன் தன் கையிலிருக்கும் பாத்திரத்திலிருந்து தண்ணீர் ஊற்றுவதாகக் கருதினர். கிரேக்கர்கள் வழக்கம்போல் இக்கூட்டத்திற்கும் தெய்வ அம்சம் கொடுத்தனர். கனிமீட் என்னும் ஒரு யுவன் மிகவும் அழகுடன் விளங்கினுன். ஆதலால் தேவர்கள் அவனை தங்கள் இருப்பிடத்திற்குக் கொண்டு போய் தங்களுக்குச் சேவகம் செய்ய வைத்துக்கொண்டனர். அவனே இக்கூட்டம் எனச் சொல்லுகின்றனர். எகிப்து தேசத்தவர்கள் இக்கூட்டத்தை ஒரு தண்ணீர் தூக்கிச்செல்லும் மனிதனுக்கு ஒப்பிடுகிருர்கள். அவன் கொண்டு போகும் பாத்திரத்தில் தண்ணீர் குறைந்தவுடன் அவன் அதை நைல் நதியில் மொள்ளுகிருனும். அம்மாதிரி அவன் செய்யும் பொழுது தான் நைல் நதி வெள்ளம் பெருகி ஓடுவதாகக் கொள்கை. சீனர்கள் இக்கூட்டத்தில் ஒரு எலியின் உருவத்தைக் காணுகிருர்கள். இக்கூட்டம் உதயமாகும்பொழுது மழை ஆரம்பிக்குமென்றும் அஸ்தமிக்கும் பொழுது, புயல் காற்று முதலியவை முடியுமென்றும் கிரேக்கர்கள் கருதுகின்றனர்.

இந்துக்கள் கொள்கைப்படி இதன் மூன்ருவது நக்ஷத்திரம் சதயத்தைக் குறிக்கிறது. 'சதயம்' என்ருல் '100 வைத்தியர்களையுடைய' என்று பெயர். ஆதலால் சதய நக்ஷத்திரத்தைச் சுற்றி 100 சிறு நக்ஷத்திரங்களை நாம் காணவேண்டும். '100' என்னும் தொகை சரியான தொகையாக நாம் எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை. சதயத்தைச் சுற்றி பல சிறு நக்ஷத்திரங்களையே குறிப்பதாக எண்ணவேண்டும். சதயத்தின் முக்கிய தெய்வம் வருணர்—மழைக்கு அறிகுறி.

குமபத்தின் முதல் இரண்டு முக்கிய நக்ஷத்திரங்களும் மூன்ரும்தரமானவை. முதல் நக்ஷத்திரம் 326 ஒளி வருஷத்திற்கப்பாலும், இரண்டாம் நக்ஷத்திரம் 465 ஒளி வருஷத்திற்கப்பாலும் இருக்கின்றன. இரண்டும் சிறிது மஞ்சள் கலந்த ஒளியுடன் பிரகாசிக்கின்றன. இதன் மூன்ரும் நக்ஷத்திரம் (சதயம்) 540 ஒளி-வருஷங்களுக்கப்பால் இருக்கின்றது. இக்கூட்டத்தினிடையேதான் உரானஸ் என்னும் கிரஹம் கண்டு பிடிக்கப் பட்டது.

ஜோதிடத்தில் பிரியமுள்ளவர்கள் பொருட்டு இம்மாதத்திய இராசி சக்கரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

		சனி	குரு
கேது	4௳—தனுர்-குஜன் 13௳—கும்ப-சுக்கிரன்		
சூரியன் சுக்கிரன் புதன்			ராகு
	குஜன்		

தைமீ க்ரஹ நிலை

புதன்:—இம்மாதம் 2-ம் தேதியன்று மகரத்திலேயே வக்ரிக்க ஆரம்பிக்கிறது. 6-ம் தேதிக்கு அப்புறம் இதை மேல் வானத்தில் காணமுடியாது. 3-ம் தேதியன்று புதன் சுக்கிரனருகில் இருக்கும். பிரகாசமான சுக்கிரன் உதவியால் புதனைக் காண முடியும். 11-ம் தேதியன்று சூரியனுடனேயே புதன் உதயமாகி அஸ்தமிக்கிறது. அதற்குப் பிறகு சூரிய உதயத்திற்கு முன்பே உதயமாகிவிடுகிறது. 23-ம் தேதியன்று (5-2-43) வக்ரத்தியாகமடைந்து கும்பத்தை நோக்கிச் செல்கின்றது.

சுக்கிரன்:-ஒவ்வொரு நாளும் அதிகநேரம் மேல்வானில் மிக அழகுடன் தோன்றி நம் மனதைக் கவர்கிறது. மகரக் கூட்டத்தில் மாதநடுவரையிருக்கும். அதற்கப்புறம் கும்பத்தினிடையே ஊர்ந்து செல்லும். இதன் பிரகாசமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பொதுவில் சுக்கிரனே முன்னிரவில் முக்கிய காக்ஷி.

குஜன்:-குஜன் விடியற்காலையில் கீழ்வானில் அழகுடன் பிரகாசிக்கின்றது. மாத நடுவில் குஜன் சுமார் 4-மணிக்கு உதயமாகிறது, சூரியன் உதயமாகும் வரை இது தன் சிவந்த ஒளியுடன் அழகாய்த் தோன்றும.

குருவும் சனியும் இம்மாதம் ஆரம்பத்தில் வக்ரி-குரு மிதுனத்திலும், சனி ரிஷபத்திலும் பிரகாசிப்பதைக் காணலாம். குரு புனர்வசு நக்ஷத்திரத்திற்கருகே தன் சிறந்த வெண்ணிற ஒளியுடன் பிரகாசிப்பதைக் காணலாம். சனி குருவைப்போல் அவ்வளவு ஒளியுடன் விளங்காவிட்டாலும், ரிஷபக் கூட்டத்தின் முக்கிய நக்ஷத்திரங்களைவிட அதிக பிரகாசமாகவே தோன்றுகிறது. சனி இம்மாதம் 24-ம் தேதியன்று வக்ரத்யாகமடைகிறது. குரு சூரியன் மறைவதற்கு முன்பே கிழக்கே உதயமாகி ஏறக்குறைய முழு இரவும் தன் சிறந்த ஒளியை வீசுவதைக் காணலாம். இவ் விரு கிரஹங்களும் மிதுன ரிஷபக்கூட்டத்தின் பிரகாசமான நக்ஷத்திரங்களினிடையே திலகம்போல விளங்குகின்றன.

உரானஸும், நெப்டியூனும் முறையே ரிஷபத்திலும், கன்னியிலும் ஊர்ந்து வருகின்றன.

சந்திரன் ஆகாயத்தில் ஊர்ந்து வருகையில் கீழ்க்கண்ட தேதிகளில் கிரகங்களின் அருகேயிருக்கும்.

ஜனவரிமீ

16௳ — சனியருகில்

20௳ — குருவினருகில்.

பிப்ரவரிமீ

2 — குஜனருகில்

3 — புதனருகில்

6 — சுக்கிரனருகில்





மகாத்மா தாம் புதிதாப் ஆரம்பிக்கப்போவதாகக் கூறிய இயக்கத்தைப்பற்றி பல கார்ட்டூன்கள் இங்கிலாந்துப் பத்திரிகைகளில் பிரசுரமாகினறன. "பிரிஸ்டல் ஈவனிங் ஒர்ல்ட்" என்ற பத்திரிகையில் வெளிவந்ததில் எச்சரிக்கப்பட்டும் அதை மதியாமல் ஜப்பான் எக்ஸ்பிரஸ் வரும்போது மகாதமா ரயில் தண்டவாளத்தின் மீது உட்கார்ந்து கொண்டிருப்பதாகப் படம் போடப்பட்டிருக்கிறது.

நிலைமை தெளிய வழி

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

எழுதியது

காங்கிரஸை அடக்கும் வேலை மும்முரமாக நடந்து வருகிறது. தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராகக் கைது செய்யப்பட்டு வருகின்றனர். காங்கிரஸுக்கு ஆதரவு காட்டியவர், ஆக்கம் அளிக்கக்கூடியவர், எல்லோரும் காவலில் வைக்கப்பட்டு வருகின்றனர். ஜனங்களிடையே பரபரப்பு காண்பது சகஜம். குழப்பத்திலே காலிகள் அட்டஹாஸம் செய்யக் கிளம்பிவிட்டனர். வருந்தக்கூடிய சம்பவங்கள் பல நிகழ்ந்து விட்டன. அடிதடி சில ஊர்களில்; துப்பாக்கிப்பிரயோகம் சில ஊர்களில்;. எங்கும் கவலை; என்ன ஆகுமோ என்ற கவலை!

போதாக் குறைக்குப் பத்திரிகைகளின் ஸ்வாதீனத்தில் குறுக்கிடக் கவர்ன்மெண்டார் முற்பட்டிருக்கின்றனர். யுத்த ஆரம்ப முதல் தணிக்கை முறை ஆளப்பட்டு வருகிறது. அதன் கடுமையைத் தவிர்க்க பத்திரிகைகளுக்கும் கவர்ன்மெண்டுக்கும் ஒரு சங்கேதம் ஏற்பட்டது. யுத்த முயற்சிக்குப் பங்கமில்லாத வரையில் ஸ்வாதீனம் அளித்து வந்தனர். புது உறவு எல்லா மாகாணங்களிலும் உதவவில்லை. சில மாகாண அதிகாரிகள் வரம்பு மீறி நடந்தனர். மத்திய கவர்ன்மெண்டிடம் முறையிட்டும் பரிகாரம் கிடைக்கவில்லை.

இந்த நிலைமையில் கட்டு இறுக ஆரம்பித்திருக்கிறது காங்கிரஸின் செல்வாக்கை அடக்க பத்திரிகைகளை உபயோகிக்கப் பார்க்கின்றனர். இன்ன சமாசாரம்தான் வெளியிடலாம்; இன்னாரிடமிருந்து வந்தால்தான் வெளியிடலாம் என்று கட்டுப்படுத்த முற்பட்டிருக்கின்றனர். எதிர்பார்க்கும் லாபம் கூடுமா என்பதை யோசிக்கவில்லை. உள்ளதையறியவே பத்திரிகைகளைப் படிக்கின்றனர். உண்மை பூராவும் வெளியாவதில்லை. உண்மைக்கு மாறாகவும் வெளியாகலாம் என்ற நிலைமை ஏற்பட்டால் பத்திரிகைகளுக்கு நஷ்டமுண்டு; கவர்ன்மெண்டுக்கு லாபமில்லை.

அடக்குமுறையின் எல்லையை அதிகாரிகள் அறிய வேண்டும். காங்கிரஸ் ஸ்தாபனத்தை அடக்கலாம். காங்கிரஸ் லக்ஷியத்தை அடக்க முடியாது. சுதந்திரமே லக்ஷியம்; எல்லாருக்கும் அதில் சிரத்தையுண்டு. அடக்குமுறைகளில் இறங்கும் கவர்ன்மெண்டார் சுதந்திரத்திற்கு ஆபத்தில்லையென்பதை கூடவே மெய்ப்பிக்க வேண்டும். அதை விட்டு, உள்ள சுதந்திரத்தையும் ஒடுக்கப்பார்ப்பது விபரீதப் போக்கு. கவர்ன்மெண்டுக்கு பலம் கட்டாது. மக்களுடைய ஆதரவே அதிகாரத்தின் அஸ்திவாரம் என்பதை மறப்பதற்கில்லை.

பெண்களும் சமூகமும்

★

ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி

என் தங்கை பாப்பாவிற்குக் கதை கேட்பதில் பிரியம் அதிகம். தந்தையார் எப்போதும் ரஜபுத்ர ஸ்திரீகளின் வீர சரிதைகளைக் கூறுவார். கூறும்பொழுதே-அந்த நங்கையர் வீர யுத்தம் புரிந்து ஸ்திரீ தர்மத்தை நிலைநாட்டுவது நம் முன் நடப்பதுபோல் அத்தனை ரஸமாய் கதை சொல்வார். ராணி லக்ஷ்மீபாய், ராணி துர்க்காவதி, பத்மினி முதலிய வட நாட்டுப் பெண்களைப்பற்றிக் கூறும்போது எனக்கு மனம் வேதனையுறும். உடனே "அப்பா தென்னாட்டில் அத்தகைய ஸ்திரீ ரத்னங்கள் ஒருவரும் இல்லையே!" என்பேன். "அப்படியன்று. நம் நாட்டிலும் ராணி மங்கம்மாள், வீர தீரத்தில் உயர்ந்து விளங்கவில்லையா? ஒளவையார் வித்வத்திலும், கவிதையிலும்சிறந்துவிளங்கவில்லையா? நீ தென்னாட்டு சரித்திரத்தை எடுத்துச் சரியாகக் கவனித்து வாசி. இனிமேலும் அத்தகைய ஸ்திரீ ரத்னங்கள் நம் நாட்டில் தோன்றி உலகத்து மாதருக்கு "எத்தகைய ஸ்திரீ தர்மம் நடத்தவேண்டும்" என்பதற்கு வழிகாட்டுவார்கள். இப்பொழுது ஸ்திரீ தர்மம் வகுத்திருப்பவர்கள் யாவரும் புருஷர்கள். பிரதி தினமும் பெண்களைப்பற்றிப்பேசுகிறார்கள். ஆனால் பெண்களுடைய தேவைகளையும், அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய கல்வியைப்பற்றியும், பெண்கள் எத்தகைய லக்ஷியத்தை அடைய ஆவலுள்ளவர்களாயிருப்பார்கள் என்பதையும் சிறிதும் அறியாமல் யோசிக்கவும் முயற்சியாமல் இருக்கிறார்கள். தாங்கள் ஏற்படுத்திய விதியில், ஒழுங்கில், சிறிதளவேனும் பிறர் குறை கூற முடியாதென்று, இறுமாப்புடன் "மெல்லியலார்" ஆகிய ஸ்திரீகளுக்கு கடுமையான சட்ட திட்டம் வகுத்திருக்கின்றனர். அவர்களது மனோபாவத்தை மாற்றினாலொழிய ஸ்திரீகள் முன்னேற முடியவே முடியாது. பரம்பரையாக எண்ணி வந்ததைப் போலவே இப்போதும் ஆடவர் "கேவலம் பெண் ஜென்மந்தானே" அவர்களுக்கு என்ன தெரியும்? என்ன முடியும்? என்றே நினைக்கிறார்கள். ஆனால் "நீ ஒரு புருஷன் தானே? உன்னால் எங்ஙனம் ஸ்திரீகளின் இயல்பையறிய முடியும்? என்று நீ கேட்கலாம். எனக்கு பெண்கள் முன்னேற்றத்தில் விசேஷ சிரத்தையிருப்பதற்குக் காரணத்தையும் கூறுகிறேன் கேள்.

தவறு திருந்தாவிடில்

இந்தக் காலத்தில் நம் மக்களுக்கு ஒரு அசட்டு மனோபாவம் இருக்கிறது. வழக்கம் என்பதற்காக எத்தகைய தவறு செய்யவும் தயாராயிருக்கிறார்கள். அந்த அநியாயத்தை ஸகிக்க எவ்வளவோ பொறுமை வேண்டும். குழந்தைப்பருவத்தில் தகுந்த பயிற்சியில்லாதபடியினால் ஏற்பட்ட மடமைதான் இதன் காரணம் ஆகும். இந்தச் சிறு பிசகை உடனே தவிர்க்க முயலாவிட்டால் பெரிய பிசகு ஏற்பட்டு ஸமூகமே அதனால் அழிந்துவிடும். பழைய பொய்யினால் புது விழிப்பை அழிக்கிறார்கள். பழைய நன்மைகளையெல்லாம் நாகரிகமென்னும் பெயரினால் புது தீமையழிக்கிறது. ஆண்கள் ஆண்மையிழந்து அறிவிழந்தனர். பெண்மை மடவிருளில் முழுகி அடைபட்டு மயக்கமுறுறது. "ஸ்திரீகளின் தன்மை எது?" என்று அறிய முடியாமல் தங்கள் மனோபாவங்கள் மன வெழுச்சிகள் உணர்ச்சிகள் முதலிய அனைத்தையும் அடக்கி வைத்திருக்கும்படி சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் உண்மையைக் கவனிக்க இடம் கொடுப்பதில்லை. அவர்கள் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் திணறுகிறார்கள். இந்தக் கட்டுப்பாட்டைச் சிறிது அலக்ஷியம் செய்யும் பெண் யாரானாலும் உடனே தூஷிக்கவும் புருஷர்கள் ஆரம்பித்து விடுகின்றனர். இதற்குப் பழைய காலத்தை எடுத்துச் சொல்லி, "அந்நாளில் ஸ்திரீகள் ஆண்களுக்கு அடங்கி நடந்து பெருமையுற்றனர்." என்று நளாயினி கதையையும், அநுஸூயையின் சரித்திரத்தையும் எடுத்துக் காட்டுவார்கள். இவர்கள் கற்பையும், நல்லொழுக்கத்தையும் நிலைநாட்டுவதற்காக இங்ஙனம் கூறவில்லை. அநேக வருஷமாக எஜமானர்களாயிருந்து, ஸ்திரீகளை அடிமையாகப் பாவித்த வழக்கத்தை தங்களிடமிருந்து நீக்க ஸாமர்த்தியமில்லாத குறையினால்தான் இவ்வண்ணம் கூறுகிறார்கள். புதுமைப் பெண், உதய கன்னி, உலக உத்தாரணத்திற்காக, உலகம் அஞ்ஞானம் நீங்கி ஆத்மீக விழிப்படைவதற்காக என் அகத்தில் தோன்றினாள்.

'நான் கண்ட கனவு'

ஒரு நாள் ஒரு கனவு கண்டேன். என் உடம்பும் பெண்ணுருவாக மாறியது. எங்கு பார்த்தாலும் பெண்கள் படுந் துயரம் என்னைத் திகிலுறச் செய்தது. கல்வியறிவில்லாமல் நம் காரிகையர் கடுந் துயரில் அகப்பட்டு உழன்றனர். ஆண்களோ, தங்கள் சரீர இன்பத்தையே பெரிதாக மதித்தனர். நான் மிகவும் துன்புற்றேன். பின்புதான் மேலே கூறியபடி பராசக்தி என்னுள் தோன்றினாள். "மகளே! பெண்களின் இந்த ஸ்திதி வந்த காரணத்தை நீ ஆராயவில்லையே! நிலத்தின் தன்மை பயிர்க்குளதாகுமாம். நீசத் தொண்டும், மடமையும் கொண்டதாய் — தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல் சாலவே யரிதாவதோர் செய்கையாம்—" ஆதலால் முதலில் நமது ஸ்திரீகளுக்குக் கல்வி அளிக்கவேண்டும். அறிவு தெளிந்தால் உடனே அவர்களைப் பீடித்திருக்கும் அஞ்ஞானம் நீங்கும். இனிமேல் சிறிது காலத்துக்குள்ளாகவே பார். பெண்கள் ஸமூகம் விழிப்படைந்துவிடும். பழைய பொய்களையும் மூடக் கட்டுப்பாடுகளையும் தகர்த்தெறிந்து, வேத காலத்துப் பெண்களைப் போல வாழ்வார்கள். அவர்களது வீரக் குழந்தைகள் நம் பாரத நாட்டை மேன்மையுறச் செயவார்கள். நீ கவலையை ஒழி" என்றாள்.

"போற்றி போற்றி ஜய ஜய போற்றி" என்று அவள் பொன்னடியில் விழுந்து வணங்கினேன். கண்ணை விழித்தேன். கனவு. நான் பெண்ணுருக்கொண்டு கனவிலேனும் அந்தக் கஷ்டத்தை நன்கறிந்திருப்பதால் எனக்கு நன்கு தெரியும். கனவில் நான் பட்ட கஷ்டத்தை, கதையைப் பின்பு சாவகாசமாகச் சொல்கிறேன் என்றார்.

"சரி. கதைபோதும் இன்று கவிதைப் பாடம் நடக்கட்டும்" என்றார் தந்தை. நாங்கள் தனித்தனியாகவும், சில சமயங்களில் இரண்டு பேரும் சேர்ந்தும் எழுதுவோம். என் தங்கை பாப்பாவின் பாட்டு.

"மாணிக்க
மேடையில்
மான் வீணை
யாடையில்
சகியே நாம் இருவரும்
செல்வோமே"

குயில்கள் மயில்கள்
எல்லாம்
குடி யிருக்கும்
சோலையில்
கூடி நாமிருவரும்
செல்வோமே.

ஆண்களில்லாக்
காட்டில்
பெண்களர
சாட்சியில்
ஸகியே நாம் இருவரும்
செல்வோமே."

இந்தப் பாட்டு எழுதும் போது பாப்பாவுக்கு மூன்று வயது.

(தொடரும்)

லண்டன் தேம்ஸ் நதியோரத்தில்

தேபஸ் நதிக்கரை ஓரததிலுள்ள ஹாமடனகோர்ட் அரண்மனையின் அழகிய தோற்றம்.

நவநாகரீகம்

★

ஒரு அலங்காரம்

★

(காசினி எழுதியது)

* * * 'நேற்று லேடி சுந்திராசாரி வீட்டுத் தேக்கச்சேரிக்கு நீ போயிருந்தாயோ?' என்று பங்கஜம் சரோஜாவைக் கேட்டாள்.

'எல்லாம் வந்திருந்தேன்!' என்று கூறி சரோஜா முகத்தை சுளித்துக் கொண்டாள்.

'ஏதுக்காக அழகு காட்டுகிறாய்? தேக்கச்சேரி தடபுடலாக நடந்துதாமே?' என்று பங்கஜம் வெடுக்கென்று கேட்டாள்.

விஷயம் தெரிந்த கமலம் புருவத்தைத் தூக்கி, விஷமச் சிரிப்பு சிரித்தாள். சமாசாரம் இதுதான். லேடி சுந்திராசாரி வீட்டுத் தேக்கச்சேரி மிகவும் ஆடம்பரமாக நடக்கப் போகிறது, என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதற்குத் தான் தனி தினுசில் சிங்காரம் செய்து கொள்ளப் போவதாக சரோஜா முன்னதாகவே கூறி ஏற்பாடு செய்தாள். இதைக் கேட்ட நளினிதேவி தானும் சிரமம் எடுத்துக்கொண்டு அலங்காரம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னாள். இருவருக்கும் இதில் ஒரு போட்டி ஏற்பட்டது என்றே கூற வேண்டும். இரண்டுபேரும் மும்முரமாக ஏற்பாடுகளைச் செய்தார்கள். இவர்கள் எந்த முறையில் சிங்காரித்துக் கொள்ளப் போகிறார்கள் என்பதை வெளியிடாமல் ரகசியமாகவே வைத்துக்கொண்டார்கள். இதனால், எது அதிக அழகான அலங்காரமாக இருக்கும் என்பதில் சிநேகிதர்களுக்குள் தர்க்கம் ஏற்பட்டது. சிலர் சரோஜாதான் புது தினுசில் சிங்காரித்து கொள்ளுவாள் என்றும், மற்றவர் நளினிதேவி கக்ஷியாகவும் பேசித் தங்களுக்குள் சச்சரவு செய்துகொண்டார்கள். ஆகையால் தேக்கச்சேரி தினத்தை எல்லாருமே ஆவலுடன் எதிர்பார்த்தார்கள்.

தேக்கச்சேரி தினமும் வந்தது. சரோஜா பழைய காலத்து முறையில் அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். அகலக்கரை உள்ள, ரவிக்கை மாதிரியில் தைய்க்கப்பட்ட சட்டை. இதற்கு மஞ்சள் உடலும், பச்சைக் கரையும் போட்டிருந்தது. கரையில் வெள்ளையில் ஆரணிச் சீர் போட்டிருந்தது. நான் முதலில் சொன்ன மாதிரி அகலக்கரை; தோளிலிருந்தே கரை ஆரம்பமாகி இருந்தது. கையும் நல்ல நீளமாகவே இருந்தது. இதற்கு ஏற்றுப்போல் புடவை கட்டி இருந்தாள். மஞ்சள் உடல்; அகலமான பச்சைக் கரை; இதில் மஞ்சள் பட்டிகள் கால் இறங்கி இருந்தது. முழ நீள பச்சைக் கரை; இதிலும் மஞ்சள் கோடுகள் விழுந்திருந்தது. காதில் ஒரு பெரிய தோடு போட்டிருந்தாள். கழுத்தில் பழைய காலத்துக் காரை அணிந்திருந்தாள்; கையில் அகலக் காப்பு; மிகவும் கம்பீரமான பழைய காலத்து முறையில் சிங்காரம் செய்து கொண்டிருந்தாள்.

நளினிதேவி தங்க டிஷ்யூ புடவை கட்டி இருந்தாள். இதற்கு அகல வெள்ளி சரிகைக் கரை வைத்துத் தைத்திருந்தது. வெள்ளி டிஷ்யூவில் கைக்கு சரிகைப் பட்டி வைத்த, குட்டைக்கை, தாழ்ந்த கழுத்து உடைய மிகவும் நேர்த்தியாக வெட்டப் பட்ட சட்டை. காதில் புதிய தினுசு நகை. இது நாடக மேடை நகையை ஒத்தது. ஒரு அல்லிகை இலை மாதிரியில் தங்கத்தில் செய்து, இதற்கு ஆழ்ந்த பச்சை இனாமல் வர்ணம் தீட்டி இருந்தது. இலையின் காம்பின் இரு பக்கமும், வைரங்கள் பதித்த இரண்டு பல்லி மொக்குகள். இலை பெரியதாகவும், காதின் மேல் பக்கத்தைப் பாதி மூடிக்கொண்டும் இருந்தது. மொக்குகள் தோடு ஸ்தானத்தில் ஜொலித்தது. கழுத்தில் சிறிய இலைகள், மொக்குகள் சேர்த்துப் பின்னப்பட்ட நெக்லெட். தங்க இலைகள்தான். சிலவற்றிற்கு ஆழ்ந்த பச்சை வர்ணமும், சிலவற்றிற்கு இலேசான பச்சை வர்ணமுமாக இனாமல் பூசி இருந்தது. வைரங்கள் பதித்த மொக்குகள். பின்னின மாதிரியில் இருந்ததால் நெக்லெட் ஒரே சீராக இல்லை. தாழ்ந்த கழுத்து வெட்டுச் சட்டை; நெக்லெட் வெறுங் கழுத்தில் அழகாக மின்னிற்று. ஒரு கைக்கு நிறைய மெல்லிய தங்க வளையல்கள்; மற்றொரு கைக்கு நெக்லெட் மோஸ்தரில் செய்யப்பட்ட, இன்னும் சிறிய வளையல் ஒன்று.

சரோஜா, நளினிதேவி இருவரும் புதிய முறையில் நேர்த்தியாகவேதான் அலங்காரம் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், சரோஜாவின் அலங்காரம், மாலை வேளையில் தோட்டத்தில் நடக்கும் கச்சேரியில் சோபிக்கவில்லை. சுற்றியுள்ள மரங், கொடிகள், மாலை வெயில் இவைகளுடன் ஒற்றுமைபெற்று தனியாக எடுத்துக் காட்டாமல் இருந்து விட்டது. ஜிலு, ஜிலு என்றிருந்த நளினிதேவி, எல்லார் கவனத்தையும் கவர்ந்து, ஒரு தினுசான அபூருவ சோபையுடன் விளங்கினாள்.

இதெல்லாம் எதுவுமே தெரியாத பங்கஜம் கேட்ட கேள்வி சரோஜாவுக்கு வேம்பாகக் கசந்ததில் அதிசயமில்லையே. அலங்காரம் செய்து கொண்டால் மட்டும் போதுமா என்ன? இடம், காலம். இரண்டும் அறிந்து செய்து கொள்ள வேண்டாமோ? மற்றைய விவரங்கள் அடுத்த கடிதத்தில்.

பலியான ஜப்பானிய விமானங்கள்



வங்காளத்திலும், அஸ்ஸாமிலும் ஜப்பானியர் குண்டு வீச வந்து அநேக விமானங்களைப் பலி கொடுத்தனர். ஜனங்கள் வீந்து பார்ப்பதற்காக விமானங்களில் சில வைக்கப்பட்டிருக்கின்றன

மதராஸ் டி. சி. என். கோல்டன் மெட்டல் ஜ்வல்லரி மார்ட்

பலவித அழகிய வளையல்கள்

அசல் தங்க வளையல்களைவிட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல.

கறுக்காது.

2-வருஷம் உத்திரவாதம். மிகவும் அழகாக இருக்கும்.

பெரிய சைஸ் 2'' அகலமும், அதற்கு மேற்பட்டதும் ஜதை	ரூ.	3	12	0
மத்திய சைஸ் $1\frac{3}{4}$'' முதல் 2''க்குள் ஜதை	ரூ.	3	2	0
குழந்தை சைஸ் $1\frac{3}{4}$க்கு உட்பட்டது ஜதை	ரூ.	2	8	0

வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதை வரை அணு 8.

எமது கேட்லாக் இனும்.

டி. சி. நாகலிங்கப்பா & கோ.,

280, வால்டாக்ஸ் ரோடு :: பார்க் டவுன் :: மதராஸ்.

தயவு செய்து கவனியுங்கள்!

உங்களுக்கு சப்ளை செய்யும் டாம்கோ கூந்தல் தைலம், ஷாம்பூ-இவைகள் உண்மையான சரக்குகள்தான் என்பதை உறுதிப்படுத்த எல்லா புட்டி வாய்களின் மேலும் மூடிகளுக்குக் கீழாக முத்திரை யொன்று அச்சிட்டிருக்கிறோம். வாங்கும் போது இந்த முத்திரை உடைக்கப்படாமலிருக்கின்றதா வென்று கவனித்து வாங்கவும்.

மூடிக்குக் கீழ் பிரசித்தி வாய்ந்த டயமண்ட் மார்க்கும், ஆரஞ்சு — பொன்னிற முத்திரையும், "A Tata Product" எனும் வார்த்தைகளும் இருக்கின்றனவாவென்று கவனியுங்கள். போலிகளால் மோசம் போகாதிருக்க உங்கள் ரீக்ஷை இதுவேயாகும்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்., டாடாபுரம் & பம்பாய்.

(T H. 3167.)

கந்தனின் ராஜ பக்தி

கந்தன் ஓர் ஏழை விவசாயியின் மகன். அவனது தந்தையான முருகன் மிகவும் நல்லவன். ஏழையாகிய அவன் தன் ஒரே புதல்வனான கந்தனை மிகவும் செல்வமாய் வளர்த்து வந்தான். ஒரு நாள் முருகன் வீட்டிற்கு ஓர் சந்நியாசி வந்தார். முருகன் அவரை முகமலர்ச்சியோடு வரவேற்று அன்பாக உபசரித்தான். ஏழையாகிய அவன் தன்னிடம் பணிவாகவும் அன்பாகவும் நடந்து கொண்டதைக்கண்ட சந்நியாசி சந்தோஷமடைந்து 'அப்பா முருகா நீ என்னிடம் காட்டிய அன்பை நான் என்றும் மறவேன். அதற்கு கைமாறாக நான் உனது புதல்வனான கந்தனை என்னுடன் அழைத்துச் சென்று அவனுக்கு வேண்டிய கல்வியையும், கலைகளையும் கற்பிக்கின்றேன். தடை சொல்லாமல் அவனை என்னுடன் அனுப்பு' என்று கேட்டார். இதைக் கேட்ட முருகன் ஆனந்தமடைந்தான். தன் மகன் கந்தனை சந்நியாசியிடம் ஒப்புவித்தான். அன்று முதல் கந்தன் சந்நியாசியின் சீடனானான்.

சந்நியாசி கந்தனுக்கு வேண்டிய கல்வியையும், அரச குமாரர்களுக்கு வேண்டியதான வில்வித்தை, குதிரையேற்றம் போன்ற பல கலைகளையும் உபதேசித்து, பயிற்சி அளித்தார். கந்தன் அவைகளை அதி சீக்கிரத்தில் கற்று ஒவ்வொன்றிலும் நிகரற்றவனானான்.

இது கண்ட சந்நியாசி கடைசியாக அவனுக்கு ஓர் மந்திரத்தை உபதேசித்தார். அம்மந்திரத்தால் கந்தன் நினைத்த மாத்திரத்தில் பிறர் காணாதபடி இருக்கும் சக்தியைப் பெற்றான். அரச குமாரனுக்கு ஈடாக சகல அம்சங்களிலும் விளங்கிய கந்தனைச் சந்நியாசி அவன் தந்தையிடம் அனுப்பினார்.

ஐந்து ஆண்டுகள் கழித்து கந்தன் தந்தையிடம் வந்தான். அதற்குள் தேசத்தில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. கந்தன் வசித்து வந்த ஊர் அரசனான காளிங்கனை அவனது பகைவனான உத்தரன் போரில் வென்று, காளிங்கனை சிறைப்படுத்தி, காளிங்கன் ராஜ்யத்திற்கும் தானே அரசனாகி அதிகாரம் செலுத்தி வந்தான். இந்த நிலைமையை உணர்ந்த கந்தன், தான் சந்நியாசியிடம் கற்ற வித்தைகளைக் கொண்டு, எப்படியாவது காளிங்கனை மீட்கத் தீர்மானம் கொண்டான்.

ஒரு நாள் மாலை கந்தன் சந்நியாசியின் மந்திர சக்தியால் பிறர் காணா வண்ணம் அரசன் இருப்பிடம் சென்று அங்கு நடந்தவைகளைக் கவனித்தான். அதிலிருந்து அவனுக்கு ஓர் உபாயம் தோன்றிற்று. எப்படியாவது உத்தரனின் ஒரே புத்திரியான மாணிக்கவல்லியை மறைவிடம் ஒன்றில் கொண்டு போய் வைத்து விட வேண்டும். என்பதே அந்த உபாயம். அடுத்த நாள் கந்தன் ஒருவரும் அறியா வண்ணம் மாணிக்கவல்லியை அரண்மனையை விட்டு அப்புறப்படுத்தி மறைத்து விட்டான். மாணிக்கவல்லியின் மறைவு அரண்மனையில் ஏக பரபரப்பை உண்டு பண்ணியது.

அரசன் அடைந்த கவலைக்கு அளவேயில்லை. ஏவலாளர் எல்லாத் திசைகளுக்கும் அனுப்பப்பட்டனர். ஆனால் அரச குமாரியின் இருப்பிடம் தெரியவில்லை. கவலை மேலிட்ட அரசன், மகளை மீண்டும் கொண்டு வந்து சேர்ப்பவருக்கு அவர்கள் விரும்பிய சன்மானம் கொடுப்பதாகப் பறை சாற்றுவித்தான். அநேகர் முயன்றும் பயனில்லை. கடைசியாக கந்தன் உத்தரனிடம் வந்து "மன்னனே! உனது மகளை எங்கிருந்தாலும் இங்கு கொண்டு வந்து சேர்க்கிறேன். நான் கேட்பதைக் கொடுப்பதாக வாக்களியும்'' என்றான். "எது வேண்டுமானாலும் நான் கொடுக்க சித்தமாயிருக்கிறேன்'' என்றான் உத்தரன். "அப்படியானால் சரி, உம்து புதல்வி உம்மிடம் வந்தவுடன் பழைய மன்னனான காளிங்கனுக்கு அரசாட்சியை ஒப்புவித்து விட்டு நீங்களெல்லோரும் உங்களிருப்பிடம் செல்ல வேண்டும். இது தான் நான் கேட்கும் சன்மானம்'' என்றான்.

உத்தரனுக்குச் சொல்ல முடியாத கோபம் வந்தது. "அது நீங்கலாக வேறு எதையும் கேள்'' என்றான். "எது கேட்பினும் கொடுப்பதாக கூறினீர்களே சொன்ன சொல் தவறுதல் அரசருக்கு அழகோ'' என்றான் கந்தன். "போரில் வென்ற அரசை போர் செய்தே திரும்பிப் பெறுதல் வேண்டும். மகளை மீட்பதற்கு சன்மானம் அதுவல்ல'' என்றான் வேந்தன். வேந்தனின் பேச்சு கந்தனுக்கு வீரா வேசத்தை மூட்டியது. "அப்படியா! நான் காளிங்கனுக்காக போரிடத் தயார்! புறப்படு போருக்கு'' என்றான். அரசன் திடுக்கிட்டான். கந்தனை சிறைப்படுத்த எத்தனித்தான். முடியவில்லை.

போர் மூண்டது. அரசனின் சைனியங்கள் அவ்வளவையும் கந்தன் தன்னந் தனியாக எதிர்த்தான். கந்தனின் வில்வித்தை வேந்தனின் படையை வெட்டிப் பிளந்தது. சமாளிக்க சக்தியற்ற அரசன் சமாதானமாகப் போக ஒப்புக் கொண்டான், போருக்கு ஈடாக புத்திரியை கந்தனுக்கே கல்யாணம் செய்விப்பதாக ஒப்புக் கொண்டான். காளிங்கன் சிறை மீட்கப்பட்டு மன்னனாக மீண்டும் மகுடாபிஷேகம் செய்து கொண்டான். கந்தன் காளிங்கனின் அத்யந்த நண்பனானான். விரோத வேந்தர்களிருவரும் விட்டுப் பிரியா நண்பர்களானார்கள். அரசர்களின் ஒற்றுமையைக் கண்டு ஜனங்கள் அனைவரும் ஆனந்தித்தார்கள்.

சிறுவர் பகுதி

★

ஸ்ரீ பெ. கு. முத்து

நவயுகப் பிரசுராலயம்.

பாரதியார் படம்	0	8
ஸப்த நதிகள்	0	8
மேஹர் உன்னிஸா	0	8
வார்தா திட்டம்	0	8
வாழ்க்கைச் சிற்பம்	0	6
திரிபுரி காங்கிரஸ்	0	6
அடிவானத்துக்கு அப்பால்	0	6
நிர்மாணம்	0	4

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ. இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்.

காஸ்டபீன்.

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE

CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள்:—

மெஸர்ஸ்:

சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.

154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

நான் காப்பாற்ற பட்டதினால், என் தாயாருக்கு மிகுந்த சந்தோஷம்.

ஜம்மியின் லிவர்க்யூர்

ஜம்மியின் லிவர்க்யூர் சென்ற 36 வருடங்களாக இவனைப்போல் ஆயிரக்கணக்கான குழந்தைகளை இவ்வ பாயகரமான ஈரல் குலைக்கட்டி வியாதிகளினின்றும் காப்பாற்றியிருக்கிறது

எல்லா விடங்களிலும் விற்கப்படுகின்றன.

ஜம்மி வெங்கிடரமனய்யா அண்டு சன்ஸ்—மைலாபூர், மதருஸ்.

சப் ஆபீஸ்:—கும்பகோணம். (S.I.R.)

பிராஞ்சுகள்:—பம்பாய், கல்கத்தா, லக்னோ, திருச்சினாப்பள்ளி, பெங்களூர், விஜயநகரம்.